பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 02 சனிக்கிழமை (14.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:080

## வியாழனன்று அறிவிக்கப்பட்ட

# புதிய பாதுகாப்பு வலயப் பகுதிக்குள்

# நேற்று ஷெல் தாக்குதல்; 27 பேர் பலி!

## இரண்டு நாள்களில் மொத்தம் 159 பேர் மாண்டனர்!!

வவுனியா, பெப்ரவரி 14

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அரசாங்கத்தினால் புதிதாக அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்துக்குள் நேற்று வெள்ளிக்கிழமை மாலையிலும் இரவிலும் மிகப் பயங் கரமான முறையில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அம்பலவன்பொக்கணை மற்றும் முள்ளிவாய்க்கால் பகுதிகள் மீது நேற்று மாலை தொடர்ச்சியாக விழுந்து வெடித்த 60 க்கும் மேற்பட்ட ஷெல்களினால் மொத்தம் 27 பேர் பலியானார்கள்.

இதேவேளை, வியாழக்கிழமையன்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வலயத்துக்குள் - தேவிபுரம், வள்ளிபுனம் - பகுதிகளில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் 132 பொது மக்கள் பலியாகினர்.

இந்தத் தாக்குதல்கள் குறித்து இணையத்தளங்கள் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:-

வியாழக்கிழமை மக்கள் பாதுகாப்பு வலயமாக புதிதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் அடங்கும் அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் ஆகிய இடங்கள் மீதும் பிறபகுதிகள் மீதும்

(16 ஆம் பக்கம் பார்க்க)



## காயமடைந்த 20 பேர் மன்னாருக்கு மாற்றம்

வவுனியா, பெப்.14

முல்லைத்தீவுப் பகுதியில் இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களில் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் மேலும் 27 பேர் கடந்த வியாழக்கிழமை இரவு மன்னார் வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுள் சிறுவர்களும் அடங்குகின்றனர். இதுவரையில் வவுனியா வைத்தியசாலையில் இருந்து மன்னார் பொது வைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

வன்னியில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்களின் முதல்தொகுதியினரின் விவரம்

2 ஆம் பக்கத்தில்

## ஈழத்தமிழருக்காக இளைஞன் முருகதாசன் ஐ.நா.சபை முன்றலில் தீக்குளித்து மரணம்



லண்டன், பெப். 14

ஈழத்தமிழ் உறவுகளை நினைவில் சுமந்தபடி, சுவிற்ஸர்லாந்தின் ஜெனீவா நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் தமிழ் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் தீக்குளித்து தன் உயிரைத் தியாகம் செய்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை முன்றலின் முன்பாக திடீரென நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8.15 தொடக்கம் 9.45 மணி வரை யான நேரத்துக்குள் இந்த இளைஞர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய, வயம்ப மாகாண சபைகளுக்கு இன்று தேர்தல்; பிரதான கட்சிகள் கடும் போட்டி

கொழும்பு, பெப். 14

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் இன்று நடைபெறுகின்றது. இரு மாகாணங்களிலும் 108 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. உட்பட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், பெப்.14

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று சனிக்கிழமை வழமை போல் இடம்பெறும் என்று யாழ். அரச அதி பர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி பயணம் செய்ய பயணச்சீட்டைப் பெற்றவர்களும் மாவட்ட செயலகத்தில் 11,13 ஆம் திகதிகளில் பயணத்துக்கான அனுமதிச்சீட்டைப் பெற்றவர்களும் முன்னுரிமை அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவர் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (1)

## திருமலைக்கு வியாழனன்றும் கப்பல் மூலம் நோயாளர்

திருகோணமலை, பெப்.14

வன்னியில் தொடரும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்கள் காரணமாகக் காயமடைந்தவர்களில் 410 பேர் கப்பல் மூலம் திருகோணமலைக்கு வியாழக் கிழமை பின்னிரவு அழைத்துச் செல்லப் பட்டனர்.

கப்பலில் இருந்து இறக்கப்பட்டவுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை அளிக்கப் பட்டது.

இந்த நோயாளர்களுக்கான வசதிகளை

(16 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் நியமித்த பிரதிநிதியை நிராகரித்தது இலங்கை அரசு!

## இருநாட்டு உறவில் விரிசல்விழும் என போகொல்லாகம எச்சரிக்கை

கொழும்பு, பெப். 14

இலங்கை விவகாரம் தொடர் பாக உதவுவதற்கென விசேட பிரதிநிதியொருவரை பிரிட்டன் நியமித் தமையை நிராகரித்துள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச் சர் றோஹித போகொல்லாகம, நாட் டின் உள் விவகாரங்களில்அந்த நாடு தலையிடுகிறது எனக் குற்றம்சாட்டியுள்ளார்.

பிரிட்டன் இலங்கையின் மனிதாபிமான நிலையைக் கையாள்வதற் காக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் டெஸ் பிரவ்னியை

(16 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி மஹிந்தவுக்கு அவசர கடிதம்

## முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்வோரை அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்பக் கோருகிறார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், பெப்.14

முல்லைத்தீவில் இருந்து இடம் பெயர்ந்து வரும் மக்களை வவுனியாவுக்கு கொண்டு செல்லாமல், அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பவேண்டும்.

அந்த இடங்களில் இடைத்தங்கல் முகாம்களை அமைத்து அவர்களைத் தங்கவைத்து பின்னர் அவர்களின் வீடுகளில் தங்க அனுமதிக்க வேண்டும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை., கிளிநொச்சியிலிருந்து வருவோருக்கு அரச பகுதிகளில் வீடுகளை அமைக்க முடிவு

### அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, பெப்.14

முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வருகின்றவர்களுக்கென தற்காலிக உறுதியான வீடுகளை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலைக்கு முதற்கட்டமாக அழைத்துச்செல்லப்பட்ட காயமடைந்த மற்றும் நோயாளர் 385 பேரின் விவரம்

திருகோணமலை, பெப்.14

வன்னியில் இருந்து கடந்த வியாழக்கிழமை கப்பல் மூலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் அழைத்துவரப்பட்ட 385 பேர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கப்பலில் அழைத்து வரப்பட்ட காயமடைந்த மற்றும் நோயாளர்களின் விவரம் வருமாறு:-

சிவலிங்கம் (வயது75)-கட்டைக்காடு, பெரியகுளம், முல்லைத்தீவு, டொமினிக் (வயது 24)- யாழ்ப்பாணம், பி.குலராணி (வயது 42)- பெரியமடு, ஜெயரூபன் (வயது 12)-வள்ளிபுரம், எஸ்.நல்லம்மா (வயது 71) -பெரியமடு, அருள்ராஜ் (வயது 11)- பெரியமடு, தேவிபுரம், கஜீபன் (வயது 8)-பெரியமடு, தேவிபுரம், யமீஸ் ரட்ணராஜா (வயது 43)- வன்னிக்குளம், கிளிநொச்சி, எஸ்.மங்கையர்க்கரசி (வயது 47)- மேகராஜா (வயது 64)- வன்னிக்குளம், கிளிநொச்சி.

எஸ்.வரதராசன் (வயது 23) - இயக்கச்சி, பி.ஜெயந்தி (வயது 46) - தர்மபுரம், கிளிநொச்சி, புவனேஸ்வரராஜா (வயது 39)- 631, மன்னார், எஸ்.தங்கவேல் (வயது73), ரி.ராமாயி-உடையார்கட்டு, முல்லைத்தீவு, பிரியதர்சினி (வயது 30)- வவுனியா, ராசமலர் (வயது 5)- வ்ட்டக்கச்சி, துஷ்யந்தினி (வயது 2)-விஸ்வமடு, முல்லைத்தீவு, சந்திரகுமார் (வயது 21)- மன்னார், துஸ்யந்தினி (வயது 21)-மன்னார்.

கே.மகேந்திரன் (வயது 42)-வற்றாப்பளை, ரி.கிருஸ்ணா (வயது 19)- இரணைப்பாலம், புதுக்குடியிருப்பு, எம்.இராசமலர் (வயது 48)-வற்றாப்பளை, எம்.மஞ்சுதன் (வயது 7)- வற்றாப்பளை,மேரி (வயது 80) - முல்லைத்தீவு, வை.லோகராசா (வயது 34)- புதுக்குடியிருப்பு, எஸ்.சுப்பிரமணியம் (வயது 59)-நெடுங்கேணி, முல்லைத்தீவு, எல்.லோஜிதா (வயது 1½) -தொண்டமான் நகர், கிளிநொச்சி, எல்.சிவாஜினி (வயது 24) - தொண்டமான் நகர், கிளிநொச்சி, எல்.நிலோசா (வயது 6)- தொண்டமான் நகர்,கிளிநொச்சி.

எஸ்.ஜேசுதாசன் (வயது 63)- வசாவிளான், பூமணி (வயது 61)- 4ஆவது மைல்கல்,புதுக்குடியிருப்பு, கங்காராணி (வயது 25)- முல்லைத்தீவு, தனபாலன் (வயது 36)-முல்லைத்தீவு, கே.அஜந்தா (வயது 30)- முல்லைத்தீவு, தனுசா (வயது 9 நாள்கள்), எஸ்.விஜிதா (வயது 23)- புதுக்குடியிருப்பு, அருந்தவராணி (வயது 49)- புதுக்குடியிருப்பு, சுதர்ஜினி (வயது 20) -வட்டக்கச்சி.

ஜெயரூபி (வயது 4நாள்)- 7 ஆவது மைல்கல், கிளிநொச்சி,பி.சாருஜன் (வயது 7) - 7 ஆவது மைல்கல், கிளிநொச்சி, தேவபாலன் (வயது 36)- முல்லைத்தீவு, என்.ரினோஜா (வயது 5) -கோணாவில்,கிளிநொச்சி, ரீட்டாமேரி (வயது 30)- கோணாவில், கிளிநொச்சி, கே.கனுசா (வயது 9)- புதுமுறிப்பு, கிளிநொச்சி, சர்சன் (வயது 4) - குமுழமுனை, முல்லைத்தீவு, சஜந்தி (வயது 6)- குமுழமுனை, முல்லைத்தீவு, பத்மாஞ்ஜனி (வயது 36)-குமுழமுனை, முல்லைத்தீவு, ஜெயந்தி (வயது 38)- புதுமுறிப்பு, கிளிநொச்சி.

எஸ்.மேரி மார்கிறற் (வயது 35) - யாழ்ப்பாணம், துவாரகா (வயது 3) - யாழ்ப்பாணம், தாரணி (வயது 5) - யாழ்ப்பாணம், ஏ.நவரட்ணம் (வயது 61)- கொடிகாமம், கே.மகேஸ்வரன் (வயது 51)- 69, ஜெயந்தி நகர், முல்லைத்தீவு, டபிள்யூ.விஜிதா (வயது 52)- இரணைப்பாலம், புதுக்குடியிருப்பு, வை.ரஞ்சனா (வயது 9)- கண்டாவளை மகாவித்தியாலயம், மேரிமஞ்சுளா (வயது 26)- விசுவமடு, முல்லைத்தீவு, கிம்சிகாந் (வயது 9)- 231, வட்டக்கச்சி, மரியராணி (வயது 60)- முல்லைத்தீவு.

எஸ்.நிமலன் (வயது 10)- மல்லாவி, ஜெயசுதன் (வயது 43)- 231, வட்டக்கச்சி, புஸ்பராணி (வயது 50)- வட்டக்கச்சி, சி.சுகந்தி (வயது 37)- யாழ்ப்பாணம், நிரோஜன் (வயது 13)- மல்லாவி, நிலானி (வயது 11)- மல்லாவி, சிவந்தி (வயது 8) - மல்லாவி, மாப்பனார் மாணிக்கம் (வயது 37)- வைத்தியசாலை விடுதி, புதுக்குடியிருப்பு, ரி.இந்திரறஞ்சனி (வயது 16)-வைத்தியசாலை விடுதி, புதுக்குடியிருப்பு, பூசையம்மா (வயது 64)- தர்மபுரம், கிளிநொச்சி.

யூலியட் (வயது 29), தாட்சாயினி ஜயந்தி (வயது 11)-மல்லாவி, கே.ஜெகதீஸ்வரன் (வயது 49)- வவுனிக்குளம், தார்மீகன் (வயது 11)- வவுனிக்குளம், வித்தியாகரன் (வயது 14)-வவுனிக்குளம், நிவேதன் (வயது 12)-வவுனிக்குளம், திருமதி எல். கஜேந்திரன் (வயது 68)- கிளிநொச்சி, இருசிகா (வயது 8)- ஒல்லாதகுளம், மஞ்சுளா (வயது 43)-ஒல்லாதகுளம், ரி.அபிரஞ்சன் (வயது 6)-பூக்கடத்துார், கிளிநொச்சி.

தமிழினியன் மதுரஞ்சா (வயது 8)- பூக்கடத்தூர், கிளிநொச்சி, தமிழினி (வயது 10)- பூக்கடத்தூர், கிளிநொச்சி,விநோஜினி (வயது 16)- உருத்திரபுரம், கிளிநொச்சி, சற்குணம் அருமைதாஸ் (வயது 25)- மல்லாவி, மனோகரன் (வயது 10)- கிளிநொச்சி, லோறி (வயது 67)- உருத்திரபுரம், கிளி நொச்சி, அமிர்தராஜா (வயது 55)-புளியங் குளம், ரி.சுபத்திராதேவி (வயது 70)-கிளி நொச்சி, கலைநிலா (வயது 2), கலைவிழி (வயது7).

கமலேந்திரன் (வயது 33)- யாழ்ப்பாணம், தாட்சாயிணி (வயது 10)- வட்டக்கச்சி, பத்மராணி (வயது 35)- பாரதிபுரம், கிளிநொச்சி, செபமாலை அந்தோனிப்பிள்ளை (வயது 31)- கன்னியர் மடம், தலைமன்னார், எஸ்.பூமலர் (வயது 60)- மிருசுவில், யாழ்ப்பாணம், ரி.அந்தோனிப்பிள்ளை (வயது 45)-வட்டக்கச்சி, திலகேஸ்வரி (வயது 32)- அரசிற்குளம், பானுசா (வயது 9), ரி.புஸ்பவதி (வயது 68)- மல்லாவி, ஆர்.உமையாள் (வயது 9 நாள்கள்)-வைத்தியசாலை விடுதி,கிளிநொச்சி.

ஆர்.தடாதகைப்பிராட்டி (வயது 49)- வைத்தியசாலை விடுதி,கிளிநொச்சி, எட்வேட் சுகந்தினி (வயது-26) - பொலிஸ் நிலைய வீதி, ஆனையிறவு, ரி.துளசி (வயது 4) -வைத்தியசாலை விடுதி, கிளிநொச்சி, ரி.லதா (வயது 35)-வைத் தியசாலை விடுதி,கிளிநொச்சி, வி.சரஸ்வதி (வயது 37)- புதுக்குடியிருப்பு, எஸ்.இராஜேஸ்வரி (வயது 40)- புளியங்குளம், செல்வகிருஷாந்தன் (வயது8)- புளியங்குளம், யோசப் பெர்னாண்டோ செபம் (வயது 60)- முல்லைத்தீவு, லைபன் (வயது 8)- ஞானபாளையம், சி.பரமேஸ்வரி (வயது 58)- கிளிநொச்சி.

பிரான்சிஸ் (வயது 37)- வைத்தியசாலை விடுதி, கிளிநொச்சி, பிரகாஸ் (வயது 10), பிரம்மிகாஸ் (வயது 2), பிரதீஸ் (வயது9), வி.ஞானகுமாரி (வயது 47)-கோப்பாய், புதுக்குடியிருப்பு, எஸ்.சிந்துஜா (வயது 18)-கிளிநொச்சி, ஜி.யோகேஸ்வரன் (வயது 17), மகாலக்சுமி (வயது 58)- கணேசபுரம், கிளிநொச்சி, சுபாஜினி (வயது 27)- ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, சுபாஜினியின் பெண் குழந்தை (வயது 3நாள்).

எஸ்.சசிதரவாணி (வயது 37)-கிளிநொச்சி, கார்த்திக் (வயது 9)- தவமணி (வயது 62)- முள்ளியவளை, சிவப்பிரகாசம் (வயது 77)-முள்ளியவளை, பகிரதன் (வயது 9)- கிளிநொச்சி, ஏ.அம்பலம் (வயது 60) கிளிநொச்சி, ஆர்.சரோஜா (வயது 51)- 39 சுதந்திரபுரம், எஸ்.சசிகரன் (வயது 31)-முரசுமோட்டை, எஸ்.சிவமணி (வயது 27)-முரசுமோட்டை, எஸ்.பானுஜா (வயது 2)- முரசுமோட்டை.

எஸ்.நாகேஸ்வரி (வயது 53)- விசுவமடு, முல்லைத்தீவு,ஜீ.சிந்துஜன் (வயது12)- பூநகரி,மரியம்மா (வயது -63) - யாழ்ப்பாணம், தேவராசா (வயது 56)- திருநகர், கிளிநொச்சி),எஸ்.சந்திரகாசன் (வயது 28)- முள்ளி யவளை, ஜெயதர்சினி (வயது 22)- முள்ளியவளை,சந்திரா (வயது 1)-முள்ளியவளை, ஜி.சிவகுருநாதன் (வயது 63)- பாட சாலை வீதி, முல்லைத்தீவு, எஸ்.ரஜிதா (வயது 25)- யாழ்ப்பாணம், கலைவாணி (வயது 23)- வட்டக்கச்சி.

கனகேஸ்வரி (வயது 67)- வட்டக்கச்சி, எம்.இராஜேஸ்வரி (வயது 48)- பெரியபளை, எஸ்.ரஜனி (வயது 32)- பெரியகுளம், மொழிச்செல்வி (வயது 2)-உதயபுரம், கிளிநொச்சி, மேரி அஞ்சலின் (வயது 71)-உதயபுரம், கிளிநொச்சி, ரட்ணபூபதி (வயது 59)- தர்ம புரம், கிளிநொச்சி, எஸ்.நிலாந்தன் (வயது 1½), மனோன்மணி (வயது 58)- கிளிநொச்சி, என்.மலரவன் (வயது 1)-ஆலங்கேணி, பூநகரி, கே.நிசாந்தன் (வயது 23)- ஆலங்கேணி,பூநகரி.

யாக்கோப் ராஜேஸ் (வயது 36)- யாழ்ப்பாணம், மரியகுணேஸ்வரி (வயது 31)- யாழ்ப்பாணம், சுந்தரலிங்கம் (வயது 55), இராமசாமி (வயது 68)- முல்லைத்தீவு, அன்னமுத்து (வயது 67)-முல்லைத்தீவு, சத்தியசீலன் (வயது4)-முல்லைத்தீவு, நாகேஸ்வரி (வயது 6)- முல்லைத்தீவு, விவேகன் (வயது 38)-முல்லைத்தீவு, சி.தேவராஜா (வயது 74)-கிளிநொச்சி, கோகிலாவின் குழந்தை (வயது 1)- கிளி நொச்சி.

கிசானா (வயது 25)-கிளிநொச்சி, கோகிலாவின் குழந்தை (வயது 2)-கிளிநொச்சி, என்.சிந்துஜா (வயது 14)- கிளிநொச்சி, என்.வளர்மதி (வயது 38)-கிளிநொச்சி, சிந்துஜன் (வயது 12)-பூநகரி, ஆர்.எல்றினி (வயது 3)- தர்மபுரம், கிளிநொச்சி, ஆர்.சசிகலா (வயது35), தர்மபுரம், கிளிநொச்சி, ஆரணி (வயது 1½) -புதுக்குடியிருப்பு, முகுந்தினி (வயது 25)- பூநகரி, அனுலாவதி-பூநகரி.

தனலக்சுமியின் குழந்தை (வயது 5நாள்)- கிளிநொச்சி, மதுசாளினி (வயது 7) - கிளிநொச்சி, சரோஜாதேவி (வயது 43), பூநகரி, தமிழின்பன் (வயது 1 1/2)-கிளிநொச்சி, கே.பவித்திரா (வயது 6)- கிளிநொச்சி, கே.அன்ரனி (வயது 4)-கிளிநொச்சி,கே.தனலட்சுமி (வயது 34)-கிளிநொச்சி, கணேசப்பிள்ளை (வயது-31)- முல்லைத்[illegible] எஸ்.அஞ்சலிகா (வயது57)- கிளி நொச்சி, [illegible]ன் (வயது 4)-கிளிநொச்சி.

ரி.பாலசுப்[illegible]மணியம் (வயது 55)-கிளிநொச்சி, என்.மோகனதாஸ் (வயது 38)- கிளிநொச்சி, நிசாந் (வயது 27)-கிளி நொச்சி, கணேசபிள்ளை (வயது 37)- முல்லைத்தீவு, அருமைநாதன் (வயது 46)- விசுவமடு, முல்லைத்தீவு, மோகன்ராஜ் (வயது 23)- இயக்கச்சி, மோகனரஞ்சிதன் (வயது 38)- இரணைமடு, தேவிகரணி (வயது 48)- இயக்கச்சி, குழந்தைவேல் (வயது 38)- முல்லைத்தீவு, சர்மினி (வயது 57)- உதயநகர், செல்வகுமார் (வயது 38)- கிளிநொச்சி.

ரி.தமிழின்பன் (வயது 61)- கிளிநொச்சி, செல்வகன் (வயது 5)- முல்லைத்தீவு, எஸ்.பிரதீபா (வயது 27)- அளவெட்டி, ஏ.சுந்தரலிங் கம் (வயது 55)- வெள்ளாங்குளம், கசியம்மா (வயது 36)- இடுப்பன்கட்டு, சிவகுமார் (வயது 5)- முல்லைத்தீவு, சுரேஸ்காந்தன் (வயது 25)- முல்லைத்தீவு, ஆர்..ஜெகதீஸ்வரி (வயது 24)- சுதந்திரபுரம், எஸ்.ரஞ்சித் (வயது 30)- சுதந்திரபுரம், ஆர்.ஜீவதாஸ் (வயது 1½)- சுதந்திரபுரம்.

எஸ்.லீலாவதி (வயது 34)- உதிப்புலம், கிளிநொச்சி, எஸ்.சியாளினி (வயது 15)- உதிப்புலம், கிளிநொச்சி, ஏ.சியாளினி (வயது 30)- தாண்டிக்குளம், வவுனியா, ஏ.கிருத்திகா (வயது 4)- தாண்டிக்குளம், வவுனியா, வி.தர்மலிங்கம் (வயது 57)- கிளிநொச்சி, பி.சுதர்சன் (வயது 32)- பொக்கணை,முல்லைத்தீவு, பாலசரஸ்வதி (வயது 35)- புதுக்குடியிருப்பு, என்.சரோஜாதேவி (வயது 50)- உடையார்கட்டு, முல்லைத்தீவு, செல்லத்துரை கலைவண்ணன் (வயது 42)-புதுக்குடியிருப்பு, கே.தர்மேஸ் (வயது 7)-தண்ணீர் ஊற்று,முள்ளியவளை.

திருமதி மகாலிங்கம் (வயது 70)-தண்ணீர் ஊற்று, முல்லைத்தீவு, பவதாரணி (வயது 5), ரியோ ஒயோலோ (வயது 24)- பரந்தன், முல்லைத்தீவு, ரியோ லேவிஸ் (வயது 67)- பரந்தன்,முல்லைத்தீவு, கே.பார்த்தசாரதி (வயது 25)- பலாலி வீதி, யாழ்ப்பாணம், சிஸ்ரர் லூட்ஸ் (வயது 67)- பரந்தன், முல்லைத்தீவு, மேரிவிக்ரோரியா (வயது 34)- வலைப்பாடு, அன்னி ரெக்டா (வயது 36)-வலைப்பாடு, கே.மகாலிங்கம் (வயது 80)- புதுக்குடியிருப்பு, செல்லம்மா (வயது 65)- கண்ணகிபுரம், கிளிநொச்சி.

கே.சர்மிளன் (வயது 24)- கிளிநொச்சி, சரிதா (வயது 24)- கிளிநொச்சி, ரதுஷன் (வயது 1½) - கிளிநொச்சி, சித்திராதேவி (வயது 34)- கிளிநொச்சி, தயாராணி (வயது 34)-வெற்றிலைக்கேணி, பௌதினி (வயது 9)- வெற்றிலைக்கேணி, ஜெசிந்தன் (வயது 1 ½), வெற்றிலைக்கேணி, ஜேசுதாஸ் (வயது 34)-வெற்றிலைக்கேணி, ஜெசிதன் (வயது 3)-வெற்றிலைக்கேணி, எஸ்.தவக்குமார் (வயது 23)- பூவரசங்குளம், வவுனியா.

கே.குருசாமி (வயது 69)- பரந்தன், எஸ்.பிரதாப் (வயது 5)-பரந்தன், எம்.மகேந்திரன் (வயது 53), எம்.இந்திராதேவி (வயது 46)- விசுவமடு,முல்லைத்தீவு, எஸ்.ரட்ணசிங்கம் (வயது 16)-கிளிநொச்சி, புஸ்பாநீலமணி (வயது 58)- நெடுங்கேணி, முல்லைத்தீவு , எஸ்.கந்தையா (வயது60)- சுதந்திரபுரம், எஸ்.தனுசா - யாழ்ப்பாணம் , வி.சற்குணராசா (வயது 35)-யாழ்ப்பாணம், எஸ்.வன் னியசிங்கம் (வயது 50)- அக்கராயன்குளம்.

என்.நடராஜா (வயது 16)- புதுக்குடியிருப்பு, எஸ்.கிருசாந் (வயது 13)-யாழ்ப்பாணம், என்.ஸ்ரீதர் (வயது 44)-பலாலி, எஸ்.செல்வரட்ணம் (வயது 70)- யாழ்ப்பாணம், ஜனகராஜ் (வயது 16)- இராமநாதபுரம், எஸ்.மாலதி (வயது 27)- யாழ்ப்பாணம், கன்னிகை (வயது 56)- விசுவமடு, எஸ்.ஜெயபாலன் (வயது 45)-கண்டாவளை, எஸ்.சுகிர்தகுமார் (வயது 48)- வட்டுக்கோட்டை, அபிதா (வயது 8)- வட்டுக்கோட்டை, எஸ்.ரோசல்லா (வயது12)- வட்டுக்கோட்டை,எஸ்.அலன் (வயது10)- வட்டுக்கோட்டை, ஏ.குணசீலன் (வயது 44)-புதுக்குடியிருப்பு, என். சண்முகநாதன் (வயது 60)-சுழிபுரம், பி.பெரி யநாயகி (வயது 50)-கிளிநொச்சி, எஸ். நடராஜா (வயது 65)-புதுக்குடியிருப்பு, ரட்ணேஸ்வரி (வயது 50)-முல்லைத்தீவு, கலையரசி (வயது 36)-கிளிநொச்சி, மேகநாதன் (வயது 65), யாழ்ப்பாணம், கே.மாணிக்கம் (வயது 85)-குமுழமுனை.

கே.கிருபாதேவி (வயது 49)- உடையார்கட்டு, ஜே.தனலட்சுமி (வயது28)- உடையார்கட்டு,எம்.யதுகுலன் (வயது 29)-உடையார்கட்டு, கஜீபன் (வயது 3)- உடையார்கட்டு, ஐ.சிவமாரி (வயது 31)- புதுக்குடியிருப்பு, மாணிக்கம் (வயது 52)- புதுக்குடியிருப்பு, வி.சிவபாதசுந்தரம் (வயது 59)-கிளிநொச்சி, ஏ.ரஜேந்திரன் (வயது 63)- மன்னார், என்.யோகேஸ்வரி (வயது 20)- யாழ்ப்பாணம், பி.துவாரகா (வயது 7)-முல்லைத்தீவு.

பாலராஜா (வயது 49)-முல்லைதீவு, சரவதி (வயது56)- யாழ்ப்பாணம், கிசோர் (வயது 1)-யாழ்ப்பாணம், சண்முகம் (வயது 64)-தேவிபுரம், எஸ்.சண்முகம் (வயது 66)- தர்மபுரம், சுவர்ணா -முள்ளியவளை, சகுந்தலாதேவி (வயது 46)-முள்ளியவளை, திலக்சியா (வயது 1)-முள்ளியவளை, செபமாலைமேரி (வயது10)-மன்னார், திருசிகா (வயது 14)- புதுக்குடியிருப்பு, இராசகுமாரி(வயது-7), தேவிபுரம்.

ரி.ஜெயராணி (வயது 54)- சுதந்திரபுரம், ரி.ஜெயந்தன் (வயது 36)- சுதந்திரபுரம், கே.மகேந்திரன் (வயது 53)-முல்லைத்தீவு, நித்தியகலா (வயது 22)-தேவிபுரம், ஏ.மதுரைநாயகம்- கிளிநொச்சி, மதுசன் (வயது 35)- கிளிநொச்சி, மயூரன் (வயது11) - கிளிநொச்சி, என்.மலர்வாணி (வயது1) - கிளிநொச்சி.

எம்.புஸ்பா ஜெனோபா (வயது 31)- கிளிநொச்சி, சிவஞானம் (வயது 47)- கனகராயன்குளம், தெய்வேந்திரராசா (வயது 31)-தேவிபுரம், கோபிகா (வயது 45 நாள்கள்)-தேவிபுரம், பிரபாகரன் (வயது 28), அசிசத் (வயது 5)-தேவிபுரம், ரோகினி (வயது 13)- பூநகரி, தனுஸ் (வயது 4)-சுதந்திரபுரம், பி.சிறிகலா (வயது 27)- சுதந்திரபுரம், கிருசாளினி (வயது 2)-சுதந்திரபுரம், எம்.அபர்ணா (வயது 5)- யாழ்ப்பாணம், அபிமன்யு (வயது 3)-யாழ்ப்பாணம், எம்.யமுனா (வயது 36)-யாழ்ப்பாணம், கந்தசாமி (வயது 54)- சுழிபுரம், பி.தட்சணாமூர்த்தி (வயது 63)- கோணாவில் கிழக்கு, எஸ்.தினகரன் (வயது 54)-ஆனந்தபுரம், கே.தர்சன் (வயது 15)- முளங்காவில், பி.லிந்துஜா (வயது 9)- மல்லாவி, பிறேமானந்தா (வயது 41)-மல்லாவி, விதுர்சன் (வயது 11)- மல்லாவி.

பி.கிருஜா (வயது 35)-மல்லாவி, திவ்யன் (வயது 4)-மல்லாவி, லக்சனா (வயது 10)- பூநகரி, பி.தனோஜன் (வயது 6)-மல்லாவி, நாகேந்திரன் (வயது 39)- முல்லைத்தீவு, எஸ்.கோவிந்தபிள்ளை (வயது 57)- புதுக்குடியிருப்பு, பி.ராமர் (வயது 51)-கிளிநொச்சி, எஸ்.யதுர்சி (வயது 16)- முள்ளியவளை, கோபாலகிருஸ்ணன் (வயது 35)- காரைநகர்.

சிவதாஸ் (வயது 24), கே.புஸ்பமலர் (வயது 52)- குமுழமுனை, ராஜேஸ்வரி (வயது 31)- பூநகரி, ஆர்.எழிலரசி (வயது 36)- முல்லைத்தீவு, எம்.சிவம்மா (வயது 40)-புதுக்குடியிருப்பு,கே.முருகேஸ் (வயது 80)- மன்னார், என்.நாகேஸ்வரி (வயது 55)- புதுக்குடியிருப்பு, கே.சிவபாலன் (வயது 37)-பூநகரி, கிருசாந்தன் (வயது 17)-கிளிநொச்சி, எம்.யசோதினி (வயது 36)-புதுக்குடியிருப்பு, எம்.பவிர்சன் (வயது 4)-புதுக்குடியிருப்பு.

எம்.விதுர்சன் (வயது 7) -புதுக்குடியிருப்பு, மகேஸ்வரி (வயது 46)-கிளிநொச்சி, எஸ்.மனோகரன் (வயது 46)- பூநகரி, டிலக்சா (வயது 2)-சோலைமரவடி, அஜந்தினி (வயது 22)- சோலைமரவடி, கணேசலிங்கம் (வயது 32)- பூநகரி, எஸ்.கேமமாலினி (வயது 32)- கிளிநொச்சி, எஸ்.திலகராணி (வயது 1) -கிளிநொச்சி, செல்வராஜா (வயது 50)-முல்லைத்தீவு,சண்முகநாதன் (வயது 70)-விசுவமடு.

வைத்தியோசப் (வயது 75)- பாசிப்பொட்டல், எஸ்.ரவிராஜ் (வயது 17)-மட்டக்களப்பு, வி.இருதயசீலி- வெல்லாவெளி, பிரபாமேரி ஜெனிற்றா (வயது 18)-வெல்லாவெளி, எஸ்.சிரிஜா (வயது 31)- அல்லிக்குளம், வவுனியா, எஸ்.தவமலர் (வயது 59)- புத்தூர் கிழக்கு, சுதர்சன் (வயது 33)- முரசுமோட்டை, றொசாலின் (வயது 48)- மாதகல், யாழ்ப்பாணம், சிதம்பரநாதன் (வயது 60)- முரசுமோட்டை, வி.ரஜனிதேவி (வயது 45)- முள்ளியவளை.

அன்ரனி தேவதாஸ் (வயது 40), மனோன்மணி (வயது 68)-மல்லாவி, ரி.திலீபன் (வயது 34)-மல்லாவி, என்.இராஜரட்ணம் (வயது 60)-குமாரபுரம், பி.தியாகலிங்கம் (வயது 69)-காரைநகர், நல்லம்மா (வயது 71)- அரியலூர், வி.கோமதி (வயது 30)- முல்லைத்தீவு, சிவசம்பு (வயது 69)-ஐயன்குளம், வவுனியா, ரி.சர்மிளா (வயது 8)-பாரதிபுரம், ரி.மேனகா (வயது 28)-பருத்தித்துறை.

எஸ்.செல்வரஞ்சி (வயது 63)-கிளி நொச்சி, ஆர்.சிறிகரன் (வயது 37)- வவுனியா, எஸ்.தமிழரசி (வயது 37)- புதுக்குடியிருப்பு, திருசிகன் (வயது 7)- புதுக்குடியிருப்பு, எஸ்.சபாரட்ணம் (வயது 57)- புதுக்குடியிருப்பு, குலசூரியன் (வயது 66)- புதுக்குடியிருப்பு, எஸ்.குலதீபன் (வயது 23)- முல்லைத்தீவு, யூ.கமலாதேவி (வயது 43)- வற்றாப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனிதாபிமான நடவடிக்கையின் போக்கும்.... நோக்கும்.....!

வன்னியில் நடத்தப்படும் போரை, ''மனிதாபிமான நடவடிக்கை'' என்று ஆலாபரணம் பண்ணி வர்ணித்து வருகிறது இலங்கை அரசாங்கம். வன்னியில் தான் நடத்திவரும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர், தமிழ் மக்களின் விடிவுக்காகவே நடத்தப்படுவதாக உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காக இந்தப் பதம் - பெயர் - கவர்ச்சிகரமானது என்று மனதில் வைத்து அரசு அதனைத் தெரிவு செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, போர் முடிந்ததும் வடக்கை அபிவிருத்தி செய்யப்போவதாகக்கூறி வெளிநாடுகளிடம் இருந்து கோடி கோடியாகப் பணத்தைக் கறந்து எடுப்பதற்கும் இந்தச்சொல் மிகப் பெரிய அளவில் உதவும் என்றும் கணக்குப் போடப்பட்டிருக்கிறது.

சுனாமி அழிவின் பின்னரான மீள்நிர்மாணத்துக்குக் கிடைத்த நிதியில் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வடக்குக்கு எவ்வாறு கிள்ளித் தெளிக்கப்பட்டது என்பது ஏற்கனவே ஒரு ''சரித்திரம்''. அந்த சரித்திரத்தை மேலும் தொடர்வதற்காக தமிழருக்கு அழிவுதரும் போருக்குச் சூட்டப்பட்டிருக்கும் பெயரே ''மனிதாபிமான நடவடிக்கை'' என்பதில் ஐயுறவு கொள்ள எதுவுமில்லை.

அரசின் ''மனிதாபிமான நடவடிக்கை'' எந்தவகையில் அடிப்படை மனிதாபிமானத்துக்கு - மனிதஉரிமைகளுக்கு முற்றிலும் நேர்மாறாக - முரணாக - மேற்கோள்ளப்பட்டிருக்கிறது என்பதற்கு மன்னார் ஆஸ்பத்திரிக் கதை ஒருதுளி உதாரணம்!

அவர் எவராக இருந்தாலும், ஜென்மப் பகையாளியாக இருந்தாலும், தன்னைக் கொல்ல வந்தவனாக இருப்பினும் - அவன் நோயாளியாகிவிட்டால் அவனது மனித உரிமைகள், வாழ்வுரிமைகளைப் பேணி உதவுவது இன்றியமையாத ஒன்றாகும்; அதுவே மனித தர்மமும் ஆகும்.

ஆனால் மோதல்களில் இடையில் சிக்குண்டு காயமுற்று மன்னார் ஆஸ்பத்திரியில், இப்போது இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் எவ்வாறு கொடுமைப்படுத்தப் படுகின்றார்கள் என்பதை நேற்றைய உதயனில் நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்தவர்கள் என்பதால், போரின் மத்தியில் அகப்பட்டுக் காயமுற்ற மக்களை இராணுவம் - அரசாங்கம் - ''தடுத்து'' வைத்திருக்கிறது.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்......

காயமுற்ற தனது ஒரு பிள்ளையுடன் ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கும் ஒருதாய், தமது உறவினர்களுடன் விட்டு விட்டு வந்த ஏனைய இரு பிள்ளைகளையும் நாளில் ஒருதரமேனும் - ஒருசிலநிமிட நேரமேனும் - சென்று பார்த்து அவர்களது தேவைகளை நிறைவேற்ற முடியாமல் வினாடிக்கு வினாடி மனம் பதைத்து உளம் உருகி உணர்வு கலங்கி அந்தரிக்கிறார்.

இராணுவம் - அரசு - தனது பாதுகாப்புக் காரணங்களைக் கருதி நோயாளர்களின் இரத்த உறவுகளையே தடுத்து வைத்து - வைத்தியசாலையை சிறைக்கூடமாக்கி உளச்சித்திரவதை செய்கிறது! எந்த சர்வதேசச் சட்டத்திலும் இத்தகைய மனச்சித்திரவதை அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை தமிழர்கள் என்றால் அவர்கள் மிருகங்களை விடக் கேவலமாக நடத்தப்பட்டாலும் எவரும் தட்டிக் கேட்கமுடியாது. இந்த நவீன உலகத்தில் மிருகங்கள் உட்பட உயிருள்ள சகல ஜீவராசிகளையும் சித்திரவதை மற்றும் கொலைசெய்யப்படுவது போன்றவற்றில் இருந்து காப்பாற்றுவதற்கு அ முதல் ஃ வரை காத்திரமான சர்வதேசச் சட்டங்கள் உள்ளன. ஆனால் நீதிக்குப் புறம்பான கொலை மற்றும் சித்திரவதை போன்ற அக்கிரமங்கள் தடுப்பார் இன்றி, வேலியே பயிரை மேயும் காட்சிகளே நாளாந்தம் இந்த நாட்டில், மிகக் குறிப்பாக தமிழர் வாழ் பூமியில் -அரங்கேறி வருகின்றன.

அவற்றை வெளிப்படுத்தினால் அல்லது சுட்டிக்காட்டினால் எவருக்கும் ஆபத்து வரும் என்ற பயப்பிராந்தியான சூழலே நாடெங்கும் நிலவுகிறது. இத்தகைய சூழலில் தமிழர்கள் என்றால் அவர்களை எதுவும் செய்யலாம், மனித உரிமைகள் மற்றும் எந்த உரிமை குறித்தும் அவர்கள் வாய்திறந்தால் ஆபத்து என்ற நிலை, என்றுமில்லாதவாறு இப்போது மிக உயர்ந்து நிற்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

வன்னியில் போரில் காயமுற்ற மக்கள் மட்டுமன்றி தமது உயிருக்கு அடைக்கலம் தேடி அரசின் நலன்புரி நிலையங்களை நாடிச்சென்ற தமிழர்களின் கதி மற்றொருகதை. கிளிநொச்சி, முல்லைத்தீவில் இருந்து அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று வவுனியா சென்று நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமிழர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வது குறித்து மூன்று வருடங்களுக்கு வாய்திறக்கக் கூடாதென்ற புறநிலை உருவாக்கப் பட்டுவருகிறது.

அவர்களை நலன்புரி நிலையங்களிலிருந்து நலன்புரிக் கிராமங்களில் குடியேற்றி வாழவைப்பதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியுள்ளது. இதுகுறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்போதுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தமிழ் மக்கள் நடத்தப்படும் விதம் குறித்து மனிதாபிமானப் பணியாளர்களும் இராஜதந்திரிகளும் கவலை வெளியிட்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இந்த லட்சணத்தில் அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கப்போவதாக அரசு கூறுகிறது: புதிய திட்டம் வகுத்துள்ளது.

அரசாங்கத்தின் இந்த வஞ்சகத் திட்டம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்கள் மீண்டும் தமது சொந்தமண்ணுக்குத் திரும்பச் செல்லாமல் தடுத்து அவர்களை அரசின் 'அடிமைகளாக' பிடித்து வைக்கும் உத்தி என்பதனை - உள்நோக்கம் அதுவே என்பதனை - புத்தியுள்ள எவரும் இலகுவில் இனம் கண்டு கொள்வர்.

இப்போது வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை உறவினர்கள் சென்று சுகம் விசாரிப்பதற்குக்கூட வசதி செய்யப்படவில்லை. அவர்கள் மனிதாபிமானமாக நடத்தப்படுகிறார்களா என்பதனைக் கண்டறிவதற்கு சர்வதேச தொண்டு நிறுவனம் எதுவும் இதுவரை அனுமதிக்கப்படவில்லை.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு செல்கையில் அவர்கள் சோதனையிடப்படும்போது போதிய கண்காணிப்பாளர்கள் இல்லை. இது குறித்து மனிதாபிமான அமைப்புகளும் இராஜதந்திரிகளும் மனந்தாங்காது கவலை வெளிணயிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அரசாங்கம் அவர்களின் கவலையை கருத்தில் எடுப்பதாக இல்லை. நலன்புரி முகாம்களை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் அரசாங்கமே நிர்வகிக்கும் என்று மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ விஜயசிங்க அடித்துக் கூறியுள்ளார்.

இதன் அர்த்தம் என்ன? தமிழர்களை நாம் நினைத்தவாறே நடத்துவோம். யாரும் தட்டிக்கேட்க முடியாது என்பதே ஆகும். தமிழ் மக்களுக்கான ''மனிதாபிமான நடவடிக்கையின்'' போக்கும் விளைவும் அவர்கள் வாழ்வைச் சீரழிக்கும் நோக்கம் சார்ந்ததே என்பதில் ஐயமில்லை.

# யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் வியாழனன்று யாழ்.செயலகத்தில்

மானிப்பாய் , பெப்.14

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு யாழ்.செயலகத் தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டஅரசாங்க அதிபர் க.கணேஷ் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

2009ஆம் ஆண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு சமூக சேவைகள், சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணிக் குழுத் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் டக்சன் சரத்சந்திரலால், யாழ். தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த ஆண்டு (2008) செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டமே 4 மாதங்களுக்கு பின்னர் இவ்வருடம் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கூட்டத்தில் 16.03.2006 இல் இறுதியாக இடம்பெற்ற கூட்டத்தின் அபிவிருத்தி முன்னேற்றம், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் ஆகியனபற்றி ஆராயப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 இல் இருந்து வடக்கை மீளபுத்தாக்கம் செய்யப்படுவது தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (1-95)

# இலங்கையின் சமாதான செயற்பாட்டாளர் பிலிப்பைன்ஸில் வைத்துக் கடத்தப்பட்டார்

லண்டன், பெப்.14

இலங்கையின் சமாதான செயற்பாட்டாளரான ஓமர்ஜலில் (வயது36) அல்கெய்டா தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்களினால் பிலிப்பைன்ஸில் கடத்தப்பட்டுள்ளார்.

சாத்வீக அமைதிப்படை என்ற இயக்கத்தைச் சேர்ந்த இலங்கையரான ஜலில் பிலிப்பைன்ஸில் பாகிலான் தீவில் கரையோர நகரான லாமிட்டானில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் இருந்த போது ஆயுதங்களுடன் வந்த தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளார்கள். அவருடனிருந்து வேலையாள் தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடத்தல்காரர்கள் பணத் துக்காக கடத்தல் செய்யும் அபுசாய் யாப் கும்பலைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டு என்று பொலிஸார் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஒரு முஸ்லிம் போதகரான அவர் கடத்தப்பட்டிருப்பது உள்ளூர் மக்கள் மத்தியில் ஆச்சரியத்தைத் தோற்றுவித்திருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்துள்ளது. (ப)

# அரியாலை மீள்குடியமர்வு; நாளை கலந்துரையாடல்

யாழப்பாணம், பெப்.14

அரியாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு தொடர்பான ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ். கனகரத்தினம் ம.ம.வி யில் நடைபெறவுள்ளது.

அரியாலை கிழக்கு ஜே/90 கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பூம்புகார், அரியாலை முனங்கு மற்றும் ஜே/89 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த மணியம் தோட்டம், உதயபுரம் ஆகிய கிராம மக்களை குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

# பல்கலைக்கழக அனுமதிப்படிவம் நேற்று விநியோகம் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம்,பெப்.14

2008/2009ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிப்படிவத்தை மாணவர்கள் நேற்று யாழ்.நகரில் உள்ள புத்தகசாலையில் நீண்ட வரிசையில் நின்று பெற்றுக்கொண்டனர்.

நேற்றையதினம் 500 அனுமதிப்படிவங்கள் மட்டுமே வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் பெரும் எண்ணிக்கையானோர் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காமல் ஏமாற்றத் துடன், திரும்பிச் சென்றதைக் காண முடிந்தது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட முகவர்களான யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பூபாலசிங்கம் புத்தக விற்பனை நிலையத்திலே மாணவர்கள் நீண்டவரிசையில் நின்றிருந்தைக் காணமுடிந்தது.

மேலும் ஒரு தொகுதி அனுமதிப் படிவங்கள் அடுத்தவாரம் எடுத்து வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (9)

# கலாசாரப் பேரவையின் மலர் வெளியீட்டுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.மாவட்ட கலை, கலாசாரப் பேரவையின் மலர் வெளியீடு சம்பந்தமான உப குழுக் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு குழு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுக் கொண்டுள்ளார். (1-6)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, பெப்.14

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண் கள், பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். (50-86)

* * *

வலி.வடக்கு, பெப்.14

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட லீக்குகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் மனோகரா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதும். (50- 86)

* * *

வலி.வடக்கு, பெப்.14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 6 பேர் பங்குபற்றும் 05 ஓவர்கள் கொண்ட கிரிக்கட் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (50-86)

## நாளை

| | |
|---|---|
| மாசி 03 | 15.02.2009 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.ப. 05.03 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி |
| | பி.இ. 02.44 வரை |
| சுபநேரம்: | 09.33 - 11.03 |
| ராகுகாலம்: | 05.03 - 06.33 |

# பஸ்களுக்குப் போதியளவு ரயர் இல்லை; பருத்தித்துறை டிப்போவின் சேவையில் பாதிப்பு

வடமராட்சி,பெப்.14

பஸ்களுக்குத் தேவையான ரயர்கள் போதியளவு இல்லாததால் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவின் சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இதன் காரணமாக வழமையாக நடத்தப்பட்டுவரும் சேவைகளில் சிலவற்றை இடைநிறுத்தி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பஸ் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளினால் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது பயணங்களை மேற்கொள்வதில் சிரமங்களையும், தாமதங்களையும் எதிர்கொள்கின்றனர். (202-236)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.

'கிளினிக்''குச் செல்லும் நோயாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சில மருந்துகள் இல்லை எனக் கூறி அதனை வெளியில் பெற்றுக்கொள்ளுமாறு கூறப்படுவதாக நோயாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் தனியார் மருந்தகங்களில் பெருந்தொகையான பணத்தினைக் கொடுத்து மருந்து வகைகளை வாங்க வேண்டி உள்ளதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

வறுமை நிலையில் உள்ள நோயாளர்கள் சிலர் பண வசதியின்மையால் மருந்து வகைகளை வாங்கிப் பாவிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்த மருந்துத் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் உயர் அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டுமென்று பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் எதிர்பார்க்கின்றனர். (50-9)

# வடமராட்சி கிழக்கின் அம்பன் கிராமத்துக்கு மின்சாரம் விநியோகம்

வடமராட்சி, பெப்.14

வடமராட்சி கிழக்கிலுள்ள அம்பன் கிராமத்துக்கான மின் விநியோகத்தை யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

இப்பிரிவில் உள்ள மணற்காடு, குடத்தனை ஆகிய கிராமங்களுக்கு ஏற்கனவே மின்சாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அருகில் உள்ள அம்பன் கிராமத்திற்கு நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப்படாமல் இருந்தது.

இது தொடர்பாக இங்குள்ள பொது அமைப்புகள் பலவும் யாழ்.அரச அதிபருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து இக்கிராம மின் விநியோக விஸ்தரிப்புக்காகப் பல மில்லியன் ரூபாவை யாழ்.அரச அதிபர் ஒதுக்கீடு செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இலங்கை மின்சாரசபை விஸ்தரிப்பு வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டது. இக் கிராமத்திற்கான மின்சார விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (202-236)

# திறந்த பல்கலைக்கழக எந்திரவியல் மாணவர்களுக்கு

இலங்கைத் திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் தொழில்நுட்பக் கற்கை நெறியினை கற்கும் அனைத்து மாணவர்களையும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (1-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்
யாழ்.வந்து விட்டார்.
சில நாள்கள் மட்டுமே இருப்பார்.
உடன் தொடர்பு கொள்ளவும்.
பதிவு செய்தவர்கள் விரைவாக தொடர்புகொள்ளவும்

**ஸ்ரீ பாலாஜி இன்**

*293, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
தொ.பே: 071 9315664



## PANDA express
UNIVERSAL COURIER

சர்வதேச தபால் பொதிகள்
கூரியர்சேவை

*Mannipay office*
Thinesh Bake House
180, Jaffna Road, Mannipay

*Chavakachcheri office*
Tharsan Communication
Sankaththanai,
Chavakachcheri.

*Nelliyady office*
Computer Express
No 7,
Science Center Road,
Nelliyady.

யாழ்நகரிலிருந்து இலங்கையின் எப்பாகத்திற்கும் பொதிகள் ஆவணங்கள் **CD's** பாதுகாப்பாகவும் விரைவாகவும் மிககுறைந்த கட்டணத்தில் அனுப்பிவைக்கப்படும்.
நீங்கள் குறிப்பிடும் முகவரியில் ஒப்படைக்கப்படும்

**No 167,Kasthuriyar Road, Jaffna. Phone: 0212228250**


## பிற்போடப்பட்டுள்ளது

15.02.2009 அன்று நடைபெறவிருந்த அளவெட்டி அழகொல்லை விநாயகர் ஆலயப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம்.

திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செ.கணேசராசா
செயலாளர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



*கடந்த 16.01.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த* எமது குடும்ப விளக்கு

### அமரர் சண்முகம் பாலசுந்தரம்
(ஆனந்தம்)

அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் நாளை (15.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் அன்னாரது வீட்டில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மூத்தவிநாயகர் கோயிலடி,*
*கரணவாய், கரவெட்டி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### *சோதிலிங்கம் பஞ்சலிங்கம்* (மண்டைதீவு- 08)



மண்டை தீவு 8ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகவும் தற்பொழுது 2/2, நீராவியடி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோதிலிங்கம் பஞ்சலிங்கம் (13.02.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிலிங்கம்-மங்கையர்க்கரசி தம்பதியினரின் அன்பு மகனும், இலட்சுமிகாந்தன்(ஆசிரியர், உயரப்புலம் மகாவித்தியாலயம்), சுந்தரலிங்கம்(கிராம உத்தியோகத்தர், திருநெல்வேலி வடக்கு J/114) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி இ.தனரஞ்சகமணி (அதிபர், இளையதம்பி இந்து மகாவித்தியாலயம்), திருமதி சு.பகீரதி (ஆசிரியை, யா/இந்து மகளிர்கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், டினேஷ்ஷாந் (யா/இந்துக் கல்லூரி மாணவன்), டிலக்ஷனா (வேம்படி மகளிர் கல்லூரி), ராஜ்காந், ஜெயகாந், விஜயராஜி, கஜலக்ஷி (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), யதீஸ்காந் ஆகியோரின் அன்பு சிறியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2009) சனிக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2/2, நீராவியடி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
[பிள்ளையார் கோவில் முன்பாக]

தகவல்: சோ.இலட்சுமிகாந்தன் (சகோதரன்)
சோ.சுந்தரலிங்கம் (சகோதரன்)

## மெய்வன்மைப் போட்டிகள்

கெருடாவில், பெப்.14

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு இவ் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற பகுதித் தலைவர் திருமதி கற்புக்கரசி சூடாமணி பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (203-236-156)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி வே.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் வே.கா.கணபதிபிள்ளை பிரதம விருந்தினராகவும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன் ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.முத்துலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204-267)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

நீர்வேலி றோ.க.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் சி.தருமரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலிகிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராசா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (1-9-72)

* * *

யாழ்ப்பாணம், பெப்.14

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பி.ப. 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஆ.குமரேசமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.பாஸ்கரன் தம்பதியர் பிரதமவிருந்தினராகவும் காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் இ.சிவகுமாரன் தம்பதியினர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204- 20- 250)

* * *

சுழிபுரம், பெப். 14

வட்டு திருநாவுக்கரசு மகாவித்தியாலய இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வித்தியாலய அதிபர் வீ.மீனேஸ்வரன் தலைமையில் வட்டுக்கோட்டை சிவன்கோயில் வீதியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலிகாமம் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் எம்.நடராசா கலத்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வட்டு மேற்கு கிராம உத்தியோகஸ்தர் திருமதி தே.கலைச்செல்வன் வட்டு. திருநாவுக்கரசு மகாவித்தியாலைய ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் செல்வி க.சத்தியபாமா ஆகியோர் கலந்து கொள்வர். (201-28)

* * *

ஆனைக்கோட்டை, பெப்.14

ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஸ்ணன் பிரதமவிருந்தினராகவும் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனப் பொறியலாளர் சு.அன்ரனிராசன் சிறப்பு விருந்தினராகவும் ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி ஆலய பங்குத் தந்தை வண. பிதா.ஜோசப் மௌலிஸ் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (202-20)

* * *

யாழ்ப்பாணம், பெப்,14

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று இடம் பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் வ.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஜனாப். மௌலவி அலாவுதீன் கலந்து கொள்வார். (1)

## தவறிவிட்டது

1/8 தண்ணீர் தாங்கி, 1ஆம் குறுக்குத்தெரு, குருநகர் என்னும் முகவரியுடைய மத்தியாஸ் யோன்சன் என்பவரின் தேசிய அடையாள அட்டை (710572461V), சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பாசையூருக்கும், குருநகருக்கும் இடையில் 13.02.2009 அன்று [illegible] மேல்குறிப்பிட்ட விலாசத்திற்கு அல்லது T.P. 0779233139 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## நன்றி கூறுகின்றோம்

எமது கோரிக்கையை ஏற்று எமது சிறார்களுக்கென ஓர் முன்பள்ளிக் கட்டடம் அமைத்து எமக்கு கையளித்த கரித்தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் **அருட்தந்தை C.G.ஜெயக்குமார்** அவர்களுக்கும் முன்னின்று அயராது உதவி புரிந்த கட்டுமானத்திட்ட முகாமையாளர் மா.ஞானேஸ்வரனுக்கும் அவருடன் சேர்ந்து ஒத்துழைத்த சகல அன்பு நெஞ்சங்களுக்கும் மனோகரா மக்கள் சார்பில் மனப்பூர்வ நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அல்வாய் மனோகரா சனசமூக நிலையம்,
அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம்,
அல்வாய் மனோகரா முன்பள்ளி.


## வைத்திய சேவை பிலிப்ஸ் நேசிங் ஹோம்
### Phillips Nursing Home

நியாயமான கட்டணத்தில் தரமான சேவை

★ வெளி நோயாளர் பிரிவு
காலை 8மணி- 1.30மணி வரை
மாலை 3.30- 7.30மணிவரை

★ இரத்தம், சிறு நீர், சளி, மலம் பரிசோதனை
(கொம்பியூட்டர் மயமான இயந்திரம் மூலம்)

★ யாழ்.போதனாவைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும் சுத்தமான, சுகாதாரமான வார்ட் வசதிகள்

★ வைத்திய நிபுணர் ஆலோசனை

பொது வைத்தியம், சத்திரசிகிச்சை, மகப்பேற்று வைத்தியம், என்பு முறிவு நெரிவு சிகிச்சை, காது மூக்கு தொண்டை, குழந்தைகள் வைத்தியம்.

**எங்கள் நோக்கம் உங்கள் சுகவாழ்வு**

*228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

குறிப்பு:- தூர இடத்து நோயாளர்கள் யாழ்- கச்சேரி மினிபஸ் சேவை மூலம் ஆஸ்பத்திரி வாசலிலேயே இறங்க முடியும்.


## மரண அறிவித்தல்கள்

### *தம்பிப்பிள்ளை பேரானந்தன்*
(உரிமையாளர், திருநெல்வேலி நாகம்மாள் மரஅரிவு நிலையம்)



வடலியடைப்பு, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பேரானந்தன் நேற்று (13.02.2009)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும் குலமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குலசிங்கம் - பூமணி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் இந்திராதேவியின் அன்புச் சகோதரனும் பானுஷா, டினோஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வானந்தனின் அன்பு மைத்துனரும் பிரதீபன், பார்த்தீபன், பிரசாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2009) சனிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு,*
*பண்டத்தரிப்பு.*

(82697)

தகவல்:
குடும்பத்தினர்.

### *திருமதி முத்துக்குமாரு கமலாதேவி*



சுன்னாகம் தெற்கு, பெரியமதவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கமலாதேவி 10.02.2009 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சிறுப்பிட்டியைச் சேர்ந்த தானையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முத்துக்குமாருவின் (பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் மோகனகுமார் (பிரான்ஸ்), தயாசாந்தி ஆகியோரின் அன்புத் தாயும் மிதிலா (பிரான்ஸ்), யோகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலசுப்பிரமணியம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பவிதா, றோபிதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய மதவடி,*
*சுன்னாகம் தெற்கு.*

தகவல்:
மோகனகுமார் (மோகன் - மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தோருக்கான இலவச நிவாரணம் இரு மாதங்களுக்கான விநியோகம் ஒரே தடவையில்

யாழ்ப்பாணம்,பெப்.14

இடம்பெயர்ந்த மக்களுக்கான ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான இலவச உலர் உணவுப் பொருள் ஒரே தடவையில் விநியோகிக்கப்படுகின்றது.

இந்த நிவாரண விநியோகத்தைக் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்குமாறு யாழ்.செயலகம் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டிருந்தது.

இந்த நிவாரணத்திற்கு சிவப்பு நாட்டரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு போன்ற பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இந்நிவாரணத்திற்கு குடும்ப அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்களின் விவரம் வருமாறு:

இலவச உலர் உணவு நிவாரண விநியோகம் ஜனவரி, பெப்ருவரி – 2009

| | | 1M | | 2M | | 3M | | 4M | | 5M | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொருள் | விலை | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி | அளவு | பெறுமதி |
| சிவப்பு நாட்டரிசி | 66.50 | 5.100 | 339.15 | 10.700 | 711.55 | 12.050 | 801.33 | 16.600 | 1,103.90 | 19.400 | 1,290.10 |
| மாவு | 60.70 | 2.000 | 121.40 | 3.500 | 212.45 | 7.000 | 424.90 | 7.000 | 424.90 | 8.000 | 485.60 |
| சீனி | 66.00 | 2.000 | 132.00 | 3.000 | 198.00 | 4.500 | 297.00 | 5.000 | 330.00 | 7.000 | 462.00 |
| பருப்பு | 156.00 | 0.500 | 78.00 | 0.700 | 109.20 | 1.000 | 156.00 | 1.000 | 156.00 | 1.800 | 280.80 |
| வழங்கியது | | | 670.55 | | 1,231.20 | | 1,679.23 | | 2,014.60 | | 2,518.50 |
| வ.வேண்டியது | | | 672.00 | - | 1,232.00 | - | 1,680.00 | - | 2,016.00 | - | 2,520.00 |
| மீதி | | | 1.45 | - | 0.80 | - | 0.77 | - | 1.20 | - | 1.50 |

## அரியாலையில் 'கோப் சிற்றி' திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.14

அரியாலை பிரதேச மக்களின் 'வசதி கருதி யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அங்கு 'கோப் சிற்றி' விற்பனை நிலையம் ஒன்றை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் திறந்துவைக்கவுள்ளது.

சங்கத் தலைவர் ப.கிரிதரன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இதற்கென சங்கத்தின் 19ஆம் இலக்க கிளை விற்பனை நிலையக் கட்டடம் நவீன முறையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தப் புனர்நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றதும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் இந்தக் கூட்டுறவு நகர் விற்பனைக் கூடம் மக்கள் பாவனைக்குத் திறந்துவைக்கப்படும்.

அரியாலை பிரதேச மக்கள் இந்த 'கோப் சிற்றி' விற்பனை நிலையம் ஊடாக பல தரப்பட்ட பொருள்களை நியாய விலையில் பெற்றுப் பயனடையமுடியும் என்று அவர் மேலும் கூறினார். (202-224)




இலங்கையில் போரை நிறுத்தவேண்டும். இந்தியா இராணுவ உதவிகளைச் செய்யக்கூடாது என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் தமிழகத்தைச் சேர்ந்த எம்.பிக்கள் டில்லியில் நாடாளுமன்றின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது.

## சாவகச்சேரி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம்,பெப்.14

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை ஆண்கள் விடுதியில் உள்ள கட்டடத்தில் அவசர சிகிச்சைப் பிரிவினை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் திறந்துவைத்தார். (202-207)

## யாழ்.மாநகர சபை முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவுப் பொருள்கள்

நல்லூர்,பெப்.14

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட பாலர் பாடசாலைச் சிறுவர்களுக்கென 'போரூட்' நிறுவனத்தால் வழங்கப்பட்ட சத்துணவுப் பொருள்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் வழங்கப்படவுள்ளன என மாநகர சபையின் செயலாளர் இ.இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

மேற்படி பொருள்கள் மாநகர சபை அலுவலகத்தில் வைத்து அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு வழங்கப்படவுள்ளதால் பாலர் பாடசாலையின் ஆசிரியர்கள் சமுகமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் இரத்தினசிங்கம் கேட்டுள்ளார். (202-111)

## சண்டிலிப்பாய் பிரதேச ஓய்வூதியர் கவனத்துக்கு!


நவாலி,பெப்.14

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெறுபவர்களின் இம்மாத ஓய்வூதிய வவுச்சருடன் 'பெற்றுக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவுப் படியினை உறுதிப்படுத்தல்' படிவமொன்றும் பிரதேச செயலரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்படிவத்தைப் பூரணப்படுத்தி கிராம சேவையாளரினதோ அல்லது திணைக்களமொன்றில் மீள் நியமனம் பெற்றிருந்தால் திணைக்களத் தலைவரினதோ கையொப்பம் பெற்று ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-100)

# சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய வகையில் முன்பள்ளிகளில் கற்பித்தல் அமையவேண்டும்

## வலிகாமம் வலயப் பணிப்பாளர் கருத்து



யாழ்ப்பாணம்,பெப்.14

நவீன உலகின் சாவல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் முன்பள்ளிகளில் இருந்தே சிறார்களுக்கு நவீன கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். கிராமப் புறங்களிலும் இவ்வாறான கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுக்க முடியும் என்பதற்கு இந்த நவீன பாலர் பாடசாலை முன் உதாரணமாக அமையட்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் நவீன பாலர் பாடசாலையைத் திறந்துவைத்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காரை கிட்ஸ் பார்க் அமைப்பின் போசகரும் ஓய்வுபெற்ற அதிபருமான பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:

'கோயில் இல்லா ஊரிலே குடியிருக்க வேண்டாம்' எனக் கூறுவார்கள். குடியிருப்பதற்குக் கோயில் இருந்தால் மட்டும் போதாது. வீதிகள், சுகாதாரம், குடிதண்ணீர், மின்சாரம்; ஆத்மீக நிலையங்கள், கல்விச் சாலைகள் என்பன நிறைவாக இருக்க வேண்டும். இதன் ஊடாகத்தான் கிராமம் உயர்ச்சியடைய முடியும். காரைநகர் கிராமத்தைப் பொறுத்தமட்டில் நவீன முன்பள்ளியை இன்று ஆரம்பிப்பதன் ஊடாக நவீன கற்பித்தல் வசதிகளைக் குழந்தைகளுக்கு ஏற்பாடு செய்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டியவர்கள் ஆசிரியர்கள். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தையாகவே மண்ணில் பிறக்கின்றது. அதனைச் சிறப்பாக, ஒழுக்கமாக வளர்த்து அவர்களின் திறன்களை வெளிக்கொணர்வதும், உற்சாகமூட்டுவதும் சமூகத்தின் பொறுப்பு. இதனை முன்பள்ளிகள் ஊடாகவே செயற்படுத்த வேண்டும் - என்றார்.

வாழ்நாள் பேராசிரியர் வே.தர்மரட்ணம் தனது வாழ்த்துரையில் தெரிவித்தவை வருமாறு:

பாடசாலைக்குச் செல்வதற்கு முன்னர் குழந்தைகள் கற்கும் கல்வியே முன்பள்ளிக் கல்வியாகும். இது நிறுவனமயப்படுத்தப்படாத கல்வியாக அமைகின்றது. முன்பள்ளிகளில் கற்றல் செயற்பாடுகள் மட்டுமன்றி பிள்ளைகளின் உடல், உள வளர்ச்சி, ஒழுக்கம் என்பன உயர்வடைவதற்கு ஆசிரியர்கள் ஒழுக்கசீலர்களாக இருக்கவேண்டும். இந்த முன்பள்ளி வித்தியாசமான முறையிலே - காரைநகர் முன்பள்ளிகளுக்கு முன் உதாரணமாக அமையவேண்டும் - என்றார். (202-250)

## நீர்வேலி - கோப்பாய் இணைப்பு வீதி சேதம்

யாழ்ப்பாணம்,பெப்.14

நீர்வேலி - கோப்பாய் இணைப்பு வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்குக் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்த வீதி கடந்த ஆண்டில் கிரவல், மக்கியைக் கொண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

அண்மையில் பெய்த கடும் மழை, வெள்ள அனர்த்தத்தினால் இந்த வீதி போக்குவரத்துச் செய்யமுடியாது சேதமுற்றுக் காணப்படுகின்றது.

கோப்பாயையும் நீர்வேலியையும் இணைக்கும் இந்த வீதியால் பயணம் செய்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வீதியின் இருமருங்கிலும் புல், பூண்டுகள் அடர்ந்து, வளர்ந்தும் காணப்படுகின்றன. (202-224)




காரை கிட்ஸ் பார்க் நவீன பாலர் பாடசாலை திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பாலர் பாடசாலையை வலிகாம வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் நாடாவெட்டித் திறந்துவைப்பதை முதலாவது படத்திலும், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

பாடசாலையில் இணைந்துகொண்ட சிறார்கள் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: தர்னிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 * 03 * 1964



உதிர்வு 14 * 02 * 2008

## இராசகுமார் யோகேஸ்வரி

ஓராண்டு ஓடி மறைந்ததுவோ
ஒன்றாய் வாழ்ந்த வாழ்வு பிரிந்ததோ?
பாசங்களோடு பின்னிப் பிணைந்துவிட்டு
பாங்காக நீ சென்ற மாயமென்னவோ?

குலவிளக்கு அணைந்த தேன்?
குலக்குன்று சரிந்ததேன்?
குவலயத்தில் வாழப் பிறந்தவளே-எமை
குமிறி அழவைத்துப் போனதேன்?

உடல் வெந்தாலும் பாச உள்ளங்கள் உன்னோடுதான்
உயிர் நீத்து எமை தனிமைப்படுத்தினாய்-எம்
உள்ளங்கள் உறங்கவில்லை
உணர்வுகள் யாவும் அழிந்து விட்டதே தாயே!

ஊஞ்சலிலே எமை வைத்து ஆட்டி மகிழ்ந்தாய்
ஊசலாடுகிறதே எம் இதயங்கள்
ஊர்கோலம் சென்று எமைப் பிரிந்து நீ
ஊமையாக்கி விட்டாயே தாயே!

இன்று (14.02.2009) சனிக்கிழமை ஓராண்டு நினைவுத் திருப்பலி ஆராதனை காலை 6 மணிக்கு உயரப்புலம் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி தேவாலயத்தில் நடைபெறும்.

*பிரிவால் துயருறும்:*
கணவர், பிள்ளைகள், சகோதரர், உற்றார், உறவினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.





வன்னியில் இடம்பெறும் விமான மற்றும் ஷெல் தாக்குதல்களில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெறும் குழந்தையையும், காயமடைந்தவர்களுக்கு மர நிழலில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## உரும்பிராயில் இன்று சைவசமயப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.14

உரும்பிராய் கண்ணகா ஸ்ரீ பரமேஸ்வரி கண்ணகை அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சைவ சமயப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பேச்சுப்போட்டி இன்றும்- எழுத்துப் பரீட்சையும், பண்ணிசைப் போட்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

போட்டிகள் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன என ஆலய நிர்வாக சபை தெரிவித்துள்ளது.

(6,7)

## காணி வீடு விற்பனைக்கு

வட்டுக் கிழக்கு, துணவி, வட்டுக் கோட்டை என்னுமிடத்தில் 3 பரப்புக் காணி வீடு விற்பனைக்குண்டு.

*தொடர்பு: சி.பரமேஸ்வரி,*
56/9, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், 1970, சித்திரை 3, பாவம் 21, அரசபணி. 1978, திருவோணம் 2, அரசபணி உள்ளநாடு மணமகன் தேவை.

T.P.: 077 6610752 7-9PM

## வாடகைக்கு

சுண்டிக்குளி பாடசாலைக்கு அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

*தொடர்பு: சி.சி.நாதன்,*
இல.16/3, விதானையார் வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். T.P.: 0776146434

## மரண அறிவித்தல்

### செபஸ்ரியாம்பிள்ளை யோசப் வெலிங்டன்



செபஸ்ரியாம்பிள்ளை யோசப் வெலிங்டன் மருதங்கடவலவைப் பிறப்பிடமாவும், கச்சாய் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை யோசப் வெலிங்டன் (12.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்கள் செபஸ்ரியாம்பிள்ளை-றோசம்மா தம்பதியரின் மகனும், அமரர்களான எலியாஸ்-லூர்த்தம்மா தம்பதியரின் மருமகனும், மார்த்தம்மாவின் அன்புக் கணவரும், நேசமலர், புஸ்பராணி, மரியதாஸ், கிறிஸ்து நாயகம், அமரர்கள் யோகராணி, சின்ராணி மற்றும் வின்சநாயகம், குஞ்சு ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சன் (ஒளிர் நகை மாடம், யாழ்ப்பாணம், சின்னக்கடைச் சந்தை), ஜெயசீலி, செல்வரஞ்சினி, தனுசன், ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.02.2009) சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு புனித லிகோரியார் சேமக்காலையில் திருப்பலியுடன் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, பிள்ளைகள்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

மண்ணில்: 26.10.1934

அவருடைய துன்பங்களில் பங்குபெற வேண்டும்
அப்போதுதான் அவரோடு மாட்சியிலும் பங்குபெறுவோம். *(உரோமர் 8:17)*

**மலர்ந்த வாழ்வில் வசந்தம் கண்டிட**
**நறுமணம் வீசிட நிறைவு பெற்று**
**உறவுகள் பேணி மகிழ்ச்சி தந்தாய்**
**நோயின் பிடியில் மெழுகென ஆனாய்**
**விடியல் காண விண்ணை நோக்கிட**
**கண்ணீர் சிந்தும் நினைவுகள் தந்தாய்.**

எம் குடும்பத்தலைவருக்கு வாழ்வு என்னும் கொடை தந்து, நலன்களால் நிரப்பி இவ்வுலகில் வழிநடத்திய தயவுக்காக, எல்லாம் வல்ல இறைவனுக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம். அவர் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது கனிவுடனும், அன்புடனும் சிகிச்சை அளித்த வைத்திய குழுவினருக்கும், இறை ஆசீர் வழங்கிய குருக்களுக்கும், ஆறுதல் வார்த்தைகள் பரிமாறி, உணவு கொடுத்தும், பராமரித்த உறவினர், நண்பர்களுக்கும், எம் நெஞ்சார்ந்த நன்றிகள். அன்னாரின் இறப்புச் செய்தி கேட்டு நேரில் வந்து துயர் பகிர்ந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், தந்திகள் மூலமாகவும் துயர் பகிர்ந்த உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் வாழும் உறவினர், நண்பர்கள், கண்டி கிளரீசியன் குருமட அதிபர் மற்றும் குருக்கள், அருட்சகோதரர் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

எம் இல்லத்தில் வந்து இரங்கல் வழிபாடுகள் செய்த யாழ்.கிளரீசியன் சபைக் குருக்கள், கொழும்புத்துறை அமலமரித் தியாகிகள் சபை அருட் சகோதரர்கள், உடுவில் ஆக்மட, மானிப்பாய் திருக்குடும்ப சபை அருட் கன்னியர்கள், பங்குத் தந்தையர், குருக் கள், திருக்குடும்ப பொது நிலை துணை அங்கத்தினர் சபையினருக்கும் எம் நன்றிகள் பல. இரங்கல் திருப்பலி நிறைவேற்றியும், மறையுரை ஆற்றியும், இறுதி ஆசீர் வழங்கிய குருக்களுக்கும், திருப்பலியில் கலந்து செபித்த அருட் கன்னியர் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகள். கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும், மலர் வளையங்கள் சாத்தியும் துயர்பகிர்ந்த யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, யா/உடுவில் மான்ஸ் ம.வி., யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை, வவு/பேயாடி கூழாங்குளம் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைச் சமூகங்களுக்கும் மற்றும் உடுவில் தமிழ் ஒளி சனசமூக நிலையத்தினர், உடுவில் தூய செபமாலை அன்னை ஆலய பங்கு மக்கள், நண்பர் யூபேட் குடும்பத்தினர் அனைவ ருக்கும் நன்றிகள் மற்றும் பல்வேறு விதத்திலும் ஆறுதல் வார்த்தைகள் பகிர்ந்தும், உணவுகள் பகிர்ந்த உறவினர்கள், நண்பர்களுக்கும், இலைமறை காய்களாக அனைத்து உதவிகள் புரிந்த வர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்கான திருப்பலி உடுவில் தூய செபமாலை அன்னை ஆலயத்தில் இன்று(14.02.2009) சனிக்கிழமை ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*இவரது பிரிவால் துயருறும்:*
**அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

இல,100, பெத்தேல்,
உடுவில்.

(82365)



விண்ணில்: 15.01.2009

அமரர் சுவாம்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை (பப்பா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செய்திச்சரம்...

## விபத்துக்களில் வயோதிபர் இருவர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,பெப்.14

சைக்கிளில் சென்ற வயோதிபர்கள் வேகமாக வந்த வாகனங்களுடன் மோதுண்டதில் படுகாயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற இச்சம்பவங்களில் இருவர் காயமடைந்தனர்.

வரணிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த ந.சங்கரப்பிள்ளை (வயது 80) என்பவருக்கு கைமுறிந்தது.

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் முத்துக்கறுப்பன் சாத்தையா (வயது 70) என்பவருக்கு முழங்கால் முறிந்தது.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (203-207)

## மக்களுக்கான சிறந்த சேவையில் கொடிகாமம் ப.நோ.கூ. சங்கம்

யாழ்ப்பாணம்,பெப்.14

இலங்கை தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தினரால் கடந்த 2007, 2008ஆகிய காலப்பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே அகில இலங்கை ரீதியில் நடத்திய வியாபாரங்களுக்கான செயற்றிறன் போட்டியில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கு திருப்திகரமான சேவைகளை வழங்கிய சங்கமாகத் தெரிவுசெய்துள்ளனர்.

இதற்கான சான்றிதழ் கடந்த மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டதாகச் சங்கப் பொது முகாமையாளர் சி.தேவகுமார் தெரிவித்தார்.

## மீண்டும் பனம்கூழ் உற்பத்திக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.14

பனை அபிவிருத்திச் சபையினர் மீண்டும் பனங்கூழை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பனங்கூழ் பிரியர்களின் வசதிகருதி மீண்டும் மாமிச மற்றும் சைவக் கூழ் உற்பத்தி செய்யப்படவுள்ளது. கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இந்த பனங்கூழ் உற்பத்தி கைவிடப்பட்டிருந்தது.

முன்னர் இந்த பனங்கூழைப் பனை அபிவிருத்திச் சபை உடனுக்குடன் சுடச்சுட உற்பத்தி செய்து விநியோகித்ததால் இவற்றிற்கு பெரும் கிராக்கி நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (202-224)

## தென்மராட்சியில் உடற்பயிற்சி நிலையம்

யாழ்ப்பாணம்,பெப்.14

தென்மராட்சி அறவழி நிலையத்தில் உடற்பயிற்சி நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு அறவழி நிலையத் தலைவர் வி.சக்திவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிலையத்தை கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் நாட்டுப் பணிப்பாளர் திருமதி கீலாக் நாடா வெட்டித் திறந்துவைத்தார். (203-131)

## எல்லே போட்டிகளும் கரபந்தாட்டமும்

யாழ்ப்பாணம்,பெப்.14

தென்மராட்சி பிரதேச பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான எல்லே போட்டிகளும், பெண்களுக்கான கரப்பந்தாட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆண், பெண் அணிகளுக்கான எல்லே போட்டிகளும் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## திருநாவுக்கரசு ம.விக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.14

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு ஒருதொகுதி விளையாட்டு உபக ரணங்கள் வழங்ப்பட்டுள்ளன.

கழகத் தலைவர் லியோ மரியராசா ஜெஸ்ரின் விளையாட்டு உபகரணங்களை வித்தியாலய அதிபர் வே.நடராசாவிடம் கையளித்தார். (202-207)

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19ஆவது ஆண்டு விழா நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.14

திருநெல்வேலி வடக்கு, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19ஆவது ஆண்டு விழா நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி கே. நந்தகுமாரன் தம்பதியர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர்.

நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் எம்.சாந்தசீலன் தம்பதியர், யாழ்.மாநகர சபை பொறியியலாளர் ஆர்.சுரேஸ்குமார் தம்பதியர், யாழ்.ஹரிகணன் பிறிண்டேர்ஸ் உரிமையாளர் எஸ்.ராஜ்குமார் தம்பதியர், சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பிரதிநிதி ஜோன்மரி ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வர். (204)

## கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,பெப்.14

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கல்லூரி அதிபர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார். (9)

## வருகை விரிவுரையாளர் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு தொடர்பாடலுக்கான ஆங்கிலம், பண்பாட்டு ஆங்கிலம் (எழுத்து), பண்பாட்டு ஆங்கிலம் (பேச்சு) ஆகிய பாடங்களுக்கான வாரநாள் வருகை விரிவுரையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான நேர்முகத்தேர்வு நாளை மறுதினம் காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது. (9)

## புண்ணிய நாச்சியம்மையார் தினம்

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் புண்ணிய நாச்சியம்மையார் தினம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.அஞ்சல் திணைக்களப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் க.புஸ்பநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

## மானிப்பாயில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

ஆனைக்கோட்டை,பெப்.14

மானிப்பாய் பொதுச்சந்தைக்கு வெளியே நிறுத்திவிடப்படுகின்ற பொதுமக்களின் சைக்கிள்கள் அண்மைக் காலங்களில் திருட்டுப்போவதாகக் கூறப்படுகின்றது.

மானிப்பாய் பொதுச்சந்தை வளாகத்தில் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் சைக்கிள் பாதுகாப்புத் தரிப்பிடம் இருந்தும், பொதுமக்கள் பாதுகாப்பிடம் தவிர்த்து வெளியே வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் சைக்கிள்களை நிறுத்திவிடுகின்றனர். பாதுகாப்பிடம் இன்றி வெளியே சைக்கிள்களை நிறுத்துவதாலேயே அவை திருட்டுப் போவதாகக் கூறப்படுகிறது. (203-20)

## மாவட்ட மட்ட விவாதப் போட்டி முடிவு

யாழ்ப்பாணம்,பெப்.14

யாழ்.மத்திய கல்லூரி கலை மாணவர் மன்றமும், விவாத மன்றமும் கடந்த திங்கட்கிழமை நடத்திய மாவட்ட மட்ட விவாதச் சுற்றுப்போட்டி முடிவு விவரங்கள் வெளியாகின.

முதலாம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலமும், இரண்டாம் இடத்தை இணுவில் மத்திய கல்லூரியும், மூன்றாம் இடத்தை யாழ்.இந்து மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. மேற்படி போட்டியில் சிறந்த விவாதியாக நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன் உ.பிரணவ தர்சன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (201)

## தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் கற்கைநெறி பாடசாலை மட்டப் பாடமாகச் சேர்ப்பு

இணுவில்,பெப்.14

காலத்தின் தேவை கருதி தொழில் முன்னிலைப் பாடங்களில் ஒன்றாகப் பாடசாலை மட்டக் கல்விப் போதனைக்குள் தொடர்பாடல் மற்றும் ஊடகவியல் கற்கை நெறி இந்த ஆண்டு சேர்க்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பாடப் பரப்புக்குள் இப்பாடம் சேர்க்கப்பட்டு சகல பாடசாலைகளிலும் போதிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாகப் பாடசாலை அதிபர்கள் மட்டத்திலான விளக்கக் கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் கடந்த புதன்கிழமை துறை சார்ந்த பேராசிரியர்களினால் நடத்தப்பட்டது.

இணுவில் மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் இப்பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அதிபர் அ.சதானந்தன் தெரிவித்தார். (202-45)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.14

உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலையத்தின் தலைவராக ச.ஏகாம்பரநாதனும், செயலாளராக த.மகேந்திரமும், பொருளாளராக வீ.புஸ்பநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202)

★ ★ ★

வடமராட்சி,பெப்.14

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தலைவர் கி.குகநாதனும், செயலாளராக ப.சிவசுப்பிரமணியமும், பொருளாளராக ந.பாலேந்திராவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202-236)

★ ★ ★

மண்டுவில்,பெப்.14

சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீ பழனி சிக்கன கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக திருமதி நந்தாயினி சூரியகுமாரும், செயலாளராகத் திருமதி பரிமளம் வைத்தியலிங்கமும், பொருளாளராக ம. விவேகானந்தனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202-59)

★ ★ ★

வடமராட்சி,பெப்.14

பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் இவ்வாண்டுக்கான புதிய தலைவராகச் சட்டத்தரணி அ.க.நடராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவராக சட்டத்தரணி பா.சுப்பிரமணியமும், செயலாளராக சட்டத்தரணி சபா.ரவீந்திரனும், பொருளாளராக சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சங்கத்தின் கொழும்புப் பிரதிநிதியாக சட்டத்தரணி திருமதி விஜியராணி உருத்திரேஸ்வரனும், இணைப்பாளரும், ஆலோசகருமான சட்டத்தரணி பொ.குமாரசாமியும் தெரிவாகினர். (1-236)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.14

கரவெட்டி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குப் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக வே.குணசிங்கமும், செயலாளராக க.ஆனந்தக்குமாரசாமியும், பொருளாளராக க.கதிர்காமத்தம்பியும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

★ ★ ★

உரும்பிராய் கிழக்குப் புனித மிக்கேல் கிராம அபிவிருத்திச் சங்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவராக த.பேரின்பநாயகமும், செயலாளராக சி.கந்தசாமியும், பொருளாளராக செ.ஜெலாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

★ ★ ★

நல்லூர்,பெப்.14

நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக ச.லோகசிவமும், செயலாளராக வ.சங்கரப்பிள்ளையும், பொருளாளராக க.சற்குணநந்தமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (202-111)

### யாழ்.வலய ஆசிரியர்கள்

## ஏழு வருடங்கள் கடமையாற்றியிருந்தால் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி,பெப்.14

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் 7 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகச் சேவையாற்றும் ஆசிரியர்களை தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் செய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏழு வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாகக் கடமையாற்றிய ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக யாழ்.கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்.வலயப் பாடசாலைகளில் ஒரே பாடசாலையில் ஏழு வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாகச் சேவையாற்றும் ஆசிரியர்களை தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக மாகாணக் கல்வித்திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப வலயத்தில் உள்ள பொருத்தமான வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் யாழ்.வலய இடமாற்றச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரே பாடசாலையில் ஏழு வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக சேவையாற்றும் 53 வயதுக்கு உட்பட்ட ஆசிரியர்கள் தாங்கள் இடமாற்றம் பெறவிரும்பும் 5 பாடசாலைகளைக் குறிப்பிட்டு இடமாற்ற விண்ணப்பத்தை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடல் பிரிவில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஐந்து பாடசாலைகளிலும் வெற்றிடங்கள் காணப்படாதவிடத்து அவர்கள் வெற்றிடம் உள்ள பொருத்தமான பாடசாலைகளுக்கு யாழ்.இடமாற்றச் சபையினால் இடமாற்றம் செய்யப்படுவர்.

இடமாற்ற விண்ணப்பத்தை சமர்ப்பிக்காத மேற்படி பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ்.வலய இடமாற்றச் சபையினால் வெற்றிடமுள்ள பொருத்தமான பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் தொடர்பான மாதிரி விண்ணப்பப் படிவங்களும் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (202-111)

### வாசகர் திருமுகம்

## நிழல் தந்த அரச மரத்தைத் தறித்தது யார்?

மஞ்சத்தடி முருகன் ஆலய முன்றிலில் நின்றிருந்த பாரிய அரச மரம் கடந்த வருட இறுதியில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தைக் காரணம் காட்டி ஊரில் வதியும் சிலரால் வெட்டி விற்கப்பட்டுள்ளது. ஆனால் இம்மரம் கடந்த கால வெள்ள அனர்த்தத்தின் போது எவ்வித பாதிப்பும் அடையவில்லை என்பது கவனிக்கத்தக்கது.


மேலும் முன்பள்ளி மழலைகளுக்கு நிழல் தந்த மரம், ஊர் முதியவர்கள், இளைஞர்கள் இளைப்பாறிய மரம் இன்று சூழல் பற்றற்ற, தூரநோக்கமற்ற, இலாபநோக்கம் கொண்ட திருடர்களால் வெட்டி விற்கப்பட்டுள்ளது.

இம்மரத்திற்கு மிகமிக அண்மையில் கிராம அலுவலரின் அலுவலகம் அமைந்திருந்தும் அவர் அமைதி காத்தது ஏன் எனப் புரியவில்லை. முன்னோர் வைத்துக் காத்த மரங்கள் இவ்வாறு அழிக்கப்படுவது வேதனை அளிக்கிறது.

யாழ்ப்பாணம்.

ராகவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குடாநாட்டின் விவசாய அபிவிருத்தி தொடர்பாகத் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம் அரசசார்பற்ற நிறுவனத்தினருடன் நடத்திய கலந்துரையாடலின் போதுி உரையாற்றுவதையும், அருகில் யாழ்.விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் இருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.

*மாகாண விவசாயப் பணிப்பாளர் சாவகச்சேரி, சரசாலைப் பகுதியில் நெல் உற்பத்தியைப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும், புங்குடுதீவில் விவசாயி ஒருவருடன் சேதனப் பசளை உற்பத்தி தொடர்பாகக் கலந்துரையாடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)*

உணவு உற்பத்தி தொடர்பில்

# விவசாயிகளும் அரச சார்பற்ற நிறுவனத்தினரும் சுயமாகத் தொழிற்பட ஊக்குவிக்க வேண்டும்

## மாகாண விவசாயப் பணிப்பாளர் கருத்து

நல்லூர், பெப்.14

விவசாயிகள், அரச சார்பற்ற நிறுவனத்தினர் ஆகியோர் உணவு உற்பத்தி, விதை உற்பத்தி மற்றும் விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருள்கள் என்பனவற்றின் பெறுமான அதிகரிப்பில் சுயமாகத் தொழிற்பட ஊக்குவித்தல் வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கே.சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

குடாநாட்டின் விவசாய நடவடிக்கைகள் குறித்து அரச சார்பற்ற நிறுவனத்தினருடனான கலந்துரையாடல் யாழ். விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதில் கருத்துரை வழங்கிய மாகாண விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நீண்ட காலத்தை அடிப்படையாகக் கொண்ட நிலையான திட்டங்களை விவசாய அபிவிருத்திக்கான அடிப்படையாகக் கொள்ள வேண்டும். நிறுவனமயப்படுத்தப்பட்ட அபிவருத்திகளாக இது இருத்தலுடன் உத்தியோகத்தர்களது, நிறுவனங்களினதும் திறனையும் மேம்படுத்த வேண்டும். அத்துடன், நிறுவனங்களும் திட்டங்களைத் தயாரித்து வெற்றிகரமாகச் செயற்படுத்த வேண்டும்- என்றார்.

(202-111)

# நவாலிச் சந்தை புனரமைப்பு

ஆனைக்கோட்டை, பெப்.14

நவாலியிலுள்ள பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மீன் சந்தை, மரக்கறிச்சந்தை உள்ளிட்ட இச்சந்தைக் கட்டடமானது 5லட்சத்து 36 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டுக்கான பிரதேச சபையின் நிதியிலிருந்தே மேற்படி சந்தை புனரமைக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(202-20)

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப்.14

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் தரம்-4 இல் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

---

## 18ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30.09.1941
உதிர்வு: 14.02.1991

கற்றிட்ட தாயே நின்
காதற் கணவனையும்
பெற்றிட்ட மைந்தனையும்
பிரிந்து நீ சென்றாலும்
பற்றுடனே கற்றவுந்தன்
பள்ளிச் சிறுவரெலாம்
பெற்றிட்ட பெருமையுமோ
பேசற் கரிதம்மா.

**திருமதி புவனேஸ்வரி அரியராஜா B.A.**

தாவடி தெற்கு,
கொக்குவில். (82434)

அரியராஜா (கணவர்),
ஜெயந்தன் (மகன்),
உறவினர்கள்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 08 . 03 . 1922
மறைவு 15 . 01 . 2009

**அமரர் கந்தையா செல்லம்மா**

அன்பின் உறைவிடமே! குடும்பத்தின் ஒளி விளக்கே!
கண்ணீரில் கரைந்தன ஒரு திங்கள்
அன்பு மனங்களில் உங்கள் இனிய நினைவுகள் என்றும் அழியாது.

சேமிபுலம் வீதி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். (82681)

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் செல்லையா நாராயணசாமி**

மலர்வு: 19.04.1933
உதிர்வு: 17.01.2009

அன்பான கணவராய்
பண்பான தந்தையாய்
பணிவான இறை தொண்டனாய்
எமை வழி நடத்திய
எம் குடும்பத் தலைவரே!
கண்ணீர் விட்டாலும் அகலாது
உம் அன்பு.

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14.02.2009) சனிக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (16.02.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதிநிகழ்வுகளின் போது வருகை தந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி மூலம், தொலைநகல், தொலைத்தந்தி மூலம் அனுதாபங்களை அனுப்பியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

229, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (82682) குடும்பத்தினர்.

---

## 31ஆம் நாள் நினைவு கூரல்



எமது மகாவித்தியாலயத்தின் ஆசிரியை
திருமதி ப.குலசிங்கம்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி ஐயம்பிள்ளை தங்கம்மா
15.01.2009இல் இறைவனடி
சேர்ந்தமைக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மாசாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

யா/சென்.ஜேம்ஸ்
மகாவித்தியாலயம்,
குருநகர், யாழ்ப்பாணம்

பாடசாலைச் சமூகம்.
(82664)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10 . 06 . 1926
உதிர்வு 15 . 01 . 2009

**அமரர் விசுவலிங்கம் கனகசபாபதி**

அன்பான அப்பாவே! ஆறாது எம்மனது
நூறாண்டு சென்றாலும் நிலைத்திருப்பீர் எம் மனதில்.

15.01.2009 அன்று இறைபதமடைந்த எமது தந்தையின் இறுதிக் கிரியைகளில் உதவி புரிந்த எல்லோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று [14.02.2009] சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

நாகபூசணி அம்மன் கோயிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (82435)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.

---

## ஓராண்டு நினைவலையில் ஆருயிர்த் தந்தை



கண் விழிப்பு 19 . 05 . 1940
கண் மறைவு 26 . 02 . 2008

**அமரர் இளையதம்பி தம்பிராஜா**
(ஓய்வுபெற்ற வன பரிபாலன அதிகாரி)
திதி: அபரபக்க பஞ்சமி

ஈசும் காற்றை வீசிநிற்கும்
சுற்றும் பூமியின் சுதந்திர ஜீவனாய்
உருமாறிய உன்னதவன்னியின் சிகரமே....!
தனியனாய் வந்த தார்மீக தத்துவத்தின் சாயலாய்
தனயன் என்னை ஆக்கினையோ!
கொட்டும் அருவியைப் பார்த்திரேன், இமயக் குளிர்ச்சியை
உணர்ந்திரேன், பலநூறு ஆலயமும் அறிகிலேன்- ஏன் எனில்
அத்தனையும் உன்னுருவில் அறிவாய்,
அன்பாய், அருளாய் இருந்ததனால்.

இல.100/04, பொன்னாலை வீதி.
சங்கானை. (82630)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



மூத்த பிரஜைகள் சேவையாளர்களின் செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் அண்மையில் சமூக நலத்துறைத் திணைக்களத்தின் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள பயிற்சியகத்தில் நடைபெற்றன.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்ட யுவதி ஒருவருக்கு மாகாணக் கணக்காய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த'லயன்' எஸ்.சுகிர்தன் சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (288)



இந்து சமய கலாசார திணைக்களத்தால் அனலைதீவு, மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா நடத்தப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் அனலைதீவு அ.த.க.பாடசாலை அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரன் பொங்கல் வைப்பதையும், அறநெறிப் பாடசாலைக் குழுவினரையும் படத்தில் காணலாம். (படம்:த.பரமலிங்கம்)



யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மிகக் கூடுதலான விற்பனையை செய்த கிளை முகாமையாளர்களில் ஒருவருக்கு ஊக்குவிப்புத் தொகையை சங்கத் தலைவர் ப.கிரிதரன் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)




கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் இ.செல்வரத்தினம் உடுவில் பிரதேச கலாசாரப் பேரவையினால் நாடகம், எழுத்துரு, நடிப்புத்துறை ஆகியவற்றுக்காக 'ஞான ஏந்தல்' விருது பெற்றமையை பாராட்டி சங்கத் தலைவர் எஸ்.சின்னராசா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கிறார். (95)



வடமராட்சி சரஸ்வதி மகளிர் வித்தியாலய குருளைச் சாரணர் சின்னஞ் சூட்டும் விழாவிலே பொறுப்பாசிரியைகள் மற்றும் விருந்தினர்களுடன் குருளைச் சாரணர்கள் காணப்படுகின்றனர். (218)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கல்வயலைச் சேர்ந்த இரத்தினம் கிருஷ்ணகுமார் என்னும் இளைஞருக்கு சக்கர நாற்காலியை அண்மையில் வழங்கினர்.

நிகழ்வில் சாவகச்சேரி கோட்டக்கல்வி அலுவலர் நா.சத்தியநாதன், சர்வதேச லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் ஆகியோருடன் கழக உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். (படம்:தென்னவன்)



குருநகரில் இருந்து புலம்பெயர்ந்து நோர்வேயின் பேர்கன், ஒஸ்லோவில் வாழும் மக்கள் 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு விசேட பயிற்சி வகுப்பினை இலவசமாக குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையம் ஊடாக நடத்துகின்றனர். பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட மாணவர்களுடன் ஆசிரியர்களும் ஏற்பாட்டாளர்களும்.



மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு இரத்த அழுத்தம் பார்க்கும் கருவி, இரத்தப் பரிசோதனை செய்யும் நவீன கருவி, ஆவி பிடிக்கும் இயந்திரம் என்பவற்றை ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா அந்த வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி ஏகாம்பரமூர்த்தி பத்மராணியிடம் கையளிப்பதையும் அருகில் வைத்தியசாலை ஊழியர்கள், அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: நவாலிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தக சாலை


## ஞானச்சுடர்



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் மாதாந்தம் வெளியிடப்படும் 'ஞானச்சுடர்' 12 ஆவது அகவையில் 133 ஆவது வாடாத மலராக 2008 ஆம் ஆண்டின் இறுதி மலராகவும் மார்கழி மாத வெளியீடாகவும் சைவப் பெருமக்களின் கரங்களில் கிடைக்கப் பெற்றுள்ளன.

ஈழத் திருநாட்டின் எங்கெல்லாம் இந்துக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் தனது சுடரைப் பரப்பிநிற்கும் ஞானச்சுடர் இம்முறையும் சைவசமயத்தின் சிறப்பான தார்ப்பரியங்களை கைங்கரியங்களை கட்டுரை, கவிதை, புராண எடுத்துக் காட்டுக்கள் எனப் பல்வேறு வடிவங்களால் பல சைவப் பெரியார்களின் ஆக்கங்களோடு வெளிவந்துள்ளது சிறப்பம்சமாகும். ஞானச்சுடர் சைவ மக்களின் ஒளிச்சுடர் என்றால் மிகையாகாது.

## இனந்தெரியாதவர்கள்



தமிழ், சிங்கள எழுத்தாளரும் மலையகத்தைப் பிறப்பிடமாகவும் கொண்ட இப் அஸீமத் அவர்களால் வெளியிடப்பட்ட கவிதைத் தொகுப்பே இனந்தெரியாதவர்கள் என்ற நூல். எமது நாட்டில் எங்கு பார்த்தாலும் மரணத்தின் ஓலங்கள், கடத்தல்கள், காணாமல் போதல் இவற்றின் அவலங்களை புதுக் கவிதை வடிவில் தந்திருக்கிறார் இப் அஸீமத்.

நான் நடந்துவரும் பூமிக்கும் இந்த பூமி பறந்து விடாதிருக்க புதையுண்டுபோன மனிதர்களுக்கும் சமர்ப்பணம் என்று தொடங்கும் கவிஞர் கவிதையில் அவலங்களையும் அவற்றை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற மனிதர்களில் அநேகமான கவிதை களைப் படைத்திருக்கிறார்.

## கலைச்சோலை



எவரும் புரிந்துகொள்ளத்தக்க இலகுவான நடையில் விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிட்டுள்ளார் எஸ்.பேராசிரியன். தொழில் சார் சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வு அறிக்கைகளை அடிப்படையாக வைத்து கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

மிருகங்கள், பூச்சியினங்கள் என்பவற்றுடன் மனித வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சிக்கல்கள் அவற்றை எதிர்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் இவரது கட்டுரைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

## வரலாறு



கல்வியமைச்சினால் மறுசீரமைக்கப்பட்டுள்ள புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக வரலாற்றுப்பாட ஆசிரியர் ஆர்.எஸ். சந்திரன் தரம் 11 மாணவர்களுக்கான வரலாறு புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.

மாணவர் பக்கத்தில் பரீட்சைக்கேற்ற வினாக்களைத் தயாரித்து அவற்றுக்கான விடைச் சட்டங்களை பருமட்டான விடைகளுடன் உருவாக்குவதற்குரிய தயார் நிலையில் இந்நூல் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

ஆங்காங்கே பொருத்தமான படங்களையும், இட்டிருப்பது மாணவர்களது மனதில் பசுமரத்தாணிபோல் வரலாற்றுச் சம்பவங் களை பதியவைப்பதாக உள்ளது. மொத்தத்தில் இவ் வரலாற்று கைநூலானது குறிப்பிட்ட பாடத்தில் தேர்ச்சி பெறுவதற்கு மாத்திரமல்லாமல் சாதாரண பொதுமக்களும் படித்துப் பயன் பெறக் கூடிய வகையில் எழுதப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும் என யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் செ.கிருஸ்ணராசா தனது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

## பண்மகள்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 185 ஆவது ஆண்டுகளை நிறைவு செய்து கொண்டுள்ள நிலையில் பண்மகள் காலாண்டு சஞ்சிகையாக வெளிவந்துள்ளது.



பண்மகள் தன்னகத்தே பல அம்சங்களைக் கொண்டு வழமையைவிட இம்முறை சிறப்பாக மிளிர்ந்துள்ளது.

பாடசாலை வரலாறு, அவ்வப்போதெல்லாம் மாணவச் செல்வங்களால் படைக்கப்பட்ட சாதனைகளையும் பாடசாலையின் மேன்மைக்காக பாடுபட்ட முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோரின் சேவைகள் பண்மகள் பக்கங்களில் ஆங்காங்கே இடம்பிடித்திருப்பதும் இன்னொரு சிறப்பம்சமாகும்.

மற்றும் மாணவர்களின் ஆக்கத்திறனை மேலும் வளப்படுத்தும் நோக்கில் அவர்களின் பல்துறை ஆக்கங்கள் பிரசுரமாகியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் 'பண்மகள்' ஒரு நோக்கில் பண்படுத்தப்பட பல அம்சங்களைத் தாங்கி வந்திருக்கிறது.

## இந்து இளைஞன்

யாழ்.இந்துக் கல்லூரியின் மாணவர்களால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகின்ற 'இந்து இளைஞன்' மலர் வெளிவந்துள்ளது.



1937 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'இந்து இளைஞன்' சஞ்சிகை முதன் முதலாய் மலர்ந்து இன்றுவரை இடைவிடாது வெளி வந்து கொண்டிருக்கிறது.

இந்துக் கல்லூரியின் அதிபர் வி.கணேசராஜாவின் ஆசியுரை முகப்புப் பக்கத்தை அலங்கரிக்க தொடர்ந்து மலரில் பல பாகங்கள் விரிந்துள்ளன.

அதில் இந்துவின் மகத்தான சாதனைகளுக்கு பல்துறைகளில் மகுடம் சூட்டிய மாணவச் செல்வங்களின் வரலாறுகள் பதியப்பட்டுள்ளன.

அத்துடன் கல்லூரியின் வளர்ச்சிக்காக தமது பணிகளை முழுமூச்சோடு செயற்படுத்தி ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோர்களின் பதிவுகளும் அமைந்துள்ளன.

மாணவர்களின் ஆக்கத்திறன் சார்ந்த பல்வேறு விடயங்களும் 'இந்து இளைஞன்' சஞ்சிகையை அலங்கரிக்கத் தவறவில்லை. மொத்தத்தில் 'இந்து இளைஞன்' சஞ்சிகை பல இதழ்களை பிரசவித்தபோதிலும் அதன் அம்சங்கள் என்றும் இளமையோடுதான் வெளிவந்துகொண்டிருப்பது சிறப்பம்சமாகும்.

## வைரப் பனைமரம்



சிறுவர் சிறுகதைகள், சிறுவருக்கான கட்டுரைகள் என் பவற்றை உள்ளடக்கி ஈழத்துப் பெண் படைப்பாளியாகிய சந்திரா தனபாலசிங்கம் எழுதி வெளியிட்டுள்ள நூல் 'வைரப் பனைமரம்' சிறுவர்கள் சிறந்த பண்புநலம் கொண்டவர்களாக மிளிர வேண்டும் என்ற நன்நோக்கோடு இந்நூலை வெளியிட்டுள்ளார்.

பத்து சிறுகதைகளையும் ஒரு சிறுவர் நலக் கட்டுரையையும் தன்னகத்தே கொண்டு வெளிவந்துள்ளது வைரப் பனைமரம்.

ஓவியங்களோடு கதைகளைப் பிரசுரித்தமையானது நூலாசிரியர் சிறுவர்களின் மனதை நன்கு புரிந்து வைத்திருப்பதை வெளிக்காட்டுகின்றது.

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.14

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மு.ப.10 [illegible] கரசபை கே[illegible] கூடத்தில் இடம்பெறும்.

நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட தொழிற்சாலைகள் பாதுகாப்பு பொறியியலாளர் எஸ்.மகேந்திரன் "தொழில்சார் பாதுகாப்பும் சுகாதார சேவைகள் கட்டளைச் சட்டமும்" என்னும் பொருளில் உரையாற்றவுள்ளார். (203-207)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,பெப்.14

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கத்தில் பயிற்சி கிளை முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். ஊர்காவற்றுறை, எழுவைதீவுக் கிளையில் கடமையாற்ற விரும்புவோருக்குமுன்னுரிமை அளிக்கப்படும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் ஊர்காவற்றுறை "என்னும்முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு மேற்படி சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (201)

## நவீல்ட் பாடசாலை மாணவர்களுக்கு விருந்துபசாரம்

யாழ்ப்பாணம்,பெப்.14

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தினர் கைதடி நவீல்ட் பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு கடந்த வாரம் விருந்துபசாரம் செய்தனர்.

கழகத் தலைவர் லயன் வீ.வீ.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சர்வதேச லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட கண் பார்வை மற்றும் செவிப்புலன் இழந்தோர் பிரிவுத் தலைவர் லயன் கா.சற்குணதேவன் லயன் சீமாட்டி இந்திரா சற்குணதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (202-207)

## தேவாரப் பண்ணிசைப் பயிற்சி

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் இலவசத் தேவாரப் பண்ணிசைப் பயிற்சி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுகின்றது.

கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் இந்தப் பண்ணிசைப் பயிற்சி வகுப்பை நடத்தி வருகின்றார். (204)


**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Diploma in Hardware Engineering*
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

*Diploma in Video Editing*
முன்னணி Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

*Diploma in Graphic Designing*
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

*Diploma in Computerized Accounting*
Course Fee : 3500/=

வகுப்புக்கள் ஆரம்பம் :16/02/2009 09.00AM


## நீங்காத நினைவில்......

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 ✱ 04 ✱ 1936



மறைவு 26 ✱ 02 ✱ 2008

### அமரர் முருகேசு சோமசுந்தரம்

(நவனிவெளி கன்னகை அம்மன் ஆலய தர்மகர்த்தா, அரியாலை)

தெய்வமே!
இதயத்தில் கனக்கும் நினைவுகள்
இமைகளில் ஈரமாய் கசிகின்றன -உம்
அன்பை இழந்து ஓராண்டு ஆனாலும்
எங்கள் உயிருள்ளவரை
உங்கள் நினைவு அழியாது

இல: 18, இளையதம்பி வீதி,
அரியாலை.

உங்கள் நினைவுடன்;
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மாணிக்கம் பாக்கியம்



யாழ்ப்பாணம் நாவலர் வீதியைப் பிறப்பிடமாகவும் மீரிகமவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் பாக்கியம் 10.02.2009 மீரிகமவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, பூவிலிங்கம், சிவராசா, செல்லம்மா, யோகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.சந்திரா(மீரிகம), மகேந்திரன் (கனடா), Dr.ரவீந்திரன் (லண்டன்), ரஞ்சினி சுந்தரலிங்கம் (ஜேர்மனி), ரஜனி பரராஜசேகரம் (அவுஸ்திரேலியா), ரஜீந்திரன் (லண்டன்), சுவேந்திரன் (கனடா), ரஜனிவாமதேவா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை Baraney Raymond's மலர்ச்சாலையில் இன்றும் (14.02.2009) சனிக்கிழமையும், நாளை (15.02.2009) ஞாயிற்றுக் கிழமையும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீரிகம.
தொ.பே:033 2273054,0715144515

தகவல்:
Dr.சந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தின சிறப்புக் கவிதைகள்




## ஆதலால் காதல் செய்வீர்

காதல் பலவுண்டு
காதலிப்பவர் பலருண்டு
காதல் என்னும் உணர்ச்சி
கல்லையும் கரைத்திடும்
கண்ணியமான காதல்
எல்லைகள் போட்டிடினும்
எவரையும் வசப்படுத்தும் காதல்
காதல் அழகில் அல்ல
காதலே அழகுதான்
அழகை அழகால்
அழகில் எழுத
அழகிய உள்ளங்கள்
நினைப்பதுவும்
ஆச்சரியமில்லை
காதல் வெறும்
வார்த்தைக்குள் அடங்கிடும்
வர்ணஜாலம் அல்ல
காதல்
எழுத்துக்களால் அடுக்கமுடியாத
பாஷை
அர்த்தமின்றி பேசமுடிந்தபாஷை
ஆதலால் காதல் செய்திடுவீர்
காதலில்
வலிகள் உருவங்களாகமாறும்
சிலவேளை
உருவங்களே வலிகளாகமாறும்
அவஸ்தைகள் உருப்பெறும்
ஜீரணிக்கமுடியாத
ஜீவன்கள் தொலையும்
இருப்பினும் அவைகள்
மகிழ்தலுக்கான ஆரம்பங்கள்
காதலின் பந்தம் சாவையும் வெல்லும்
சரித்திரம் படைக்கும்
ஆதலால் காதல்
செய்வீர்..

வெ.துஷ்யந்தன், அல்வாய்.

## காதல் துளிகள்.....

என்
இரு கண்ணிலும்
உன் பெயரை எழுதுகின்றேன்
உறங்காமல் இருந்தும்
கனவு காண்கின்றேன்
எந்த நாளும்
என் ஜீவன் உன்னிடமே...

காதல் வந்த பிறகு – என்
காகிதப் பேப்பர் கூட
கவிதையில் நனைகின்றது

வரமொன்றைப் பரிசளிப்பாயென
வழிமீது விழிவைத்துள்ளேன்!
வரந்தர வருவாயா?

வி.செல்வன், கொக்குவில்.



## காதலே...!

விழிகளால் எழுதிடும் முதல்வரி காதல்
இதயத்தைத் தாலாட்டிடும் இன்னிசை காதல்.

சொல்லிடத்துடித்திடும் வார்த்தைகள் – அது
வெட்கத்தில் மறைந்திடும் ஓடி
கற்றவரையும் தடுமாறவைக்கும் காதல்
அவர் கம்பனாகவும் மாறிடுவீர் பாரீர்
ஈருயிரும் ஒருயிராய் கலந்திட்ட காதல்
அதில் தமக்கென உலகமைத்திடும்தானே
பொல்லாத உணர்வுதான் காதல்
கடிகாரம்கூட எதிரியாய்மாறும்
பிரிவுகூட ரணமாய் கொல்லும்
கூடவே இருந்திட நினைப்பர்
அவர்கள் பேசிடும் மொழியோ மௌனம்

காதலே.......! காதலே.......!
வந்துவிட்டது உனக்கென ஒருநாள் – அதில்
சொல்லிடத்துடிப்பவர் சொல்லிடுவர்
அன்புடன் கலந்தவர் ஊடல் கொண்டிடுவர்
நான் ஒற்றைக்குயில்தான் –ஆயினும்
வாழ்த்திடுவேன் இந்நாளில் காதலர்களை.

சுபா, அச்சுவேலி மேற்கு.

## இன்னும் வரவில்லை.....!

கனவுகளோடு கலந்து – என்
இதயத்தில் இதமாய்
உன் நினைவுகளை மட்டும்
தந்துவிட்டவனே– ஏன்
நிதர்சனமாய் நீயின்னும் வரவில்லை?

முகம்காட்டாமல் – என்
முகவரிக்குள் நுழைந்து
என்னுள்ளே முழுதாய்
தொலைந்துவிட்டவனே– ஏன்
நிதர்சனமாய் நீயின்னும் வரவில்லை?

உருவம்காட்டாமல் – என்
உணர்வுக்குள் உயிராகி
உயிருக்குள் தினமும்
உறைந்துவிட்டவனே – ஏன்
நிதர்சனமாய் நீயின்னும் வரவில்லை?

என் உடலில் – உயிர்
உள்ளவரை உன்னுடன்
பேசிக்கொண்டிருப்பேன்
மௌனமாக – நீ
நிதர்சனமாய் வரும்வரை!

வி.கஜீதா

## சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல்களில் துலங்கும் ஆடற்கருத்துக்கள்

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்து குயவனார்க்கும் அடியேன்....."

என்று இறைவன் தொட்டு இறைபணி செய்யும் அடியவர்க்கெல்லாம் தாம் அடியோம் என்றும் அவர்களுக்குப் பணி செய்வதே தன் கடன் என்றும் பாடி, 62 தனியடியார்கள் பற்றியும், 9 தொகையடியார்கள் பற்றியும் திருத்தொண்டர் தொகையைத் தந்தருளியவர், சுந்தரமூர்த்தி நாயனார். சைவநெறி தழைத்தோங்க தமிழ்த் தேவாரப் பதிகங்களை எமக்கிந்த சமயக்குரவர்களுள் ஒருவர். தேவர்களுக்குச் சூட்டும் பாமாலை புனைந்து முத்தியடைந்த மூர்த்தியார். தாம் எம் மனத்திலே இறைபக்தியைக் கொண்டுவர வழி காட்டுபவை இவரது தேவாரப் பாசுரங்கள். பாடுவோரைப் பரவசமடையச் செய்யவும், கேட்போர் மனதை இறைவன்பால் கசிந்துருக வைப்பன. நம்பியாண்டார் நம்பியினால் 7 ஆம் திருமுறையாகத் தொகுக்கப்பெற்ற பாடல்கள் சுந்தரரால் பல்லவர் காலத்திலே (கி.பி 6-9) பாடப்பட்டவை. முன் வினைப் பயனாக பூமியிலே தடுத்தாட்கொள்ளப்பட்டு பின் இறைவனிடம் தன் உலக வாழ்வை முடித்து விடும்படி கேட்டதன் பயனாக இறைவனால் கைலைக்கு அழைக்கப்பட்டு முக்தியடைந்தார். (வளரும்)

உ.உமாமகேஸ்வரி, உடுவில் தெற்கு.



# வாரவசந்தம்

# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்

கோகுலராகவன்

பிள்ளைகளுக்குப் படிக்கக் கூடிய சூழ்நிலை பள்ளிகளில் இருப்பது போன்று வீடுகளிலும் இருக்கவேண்டியது மிகவும் அவ சியம். எனது அப்பப்பா வீட்டில் "படிப்பு வீடு" என்று தனி வீடு இருந்ததாக ஞாபகம். அது பெரிதாக கட்டப்படாதல்ல. கிடுகால் வேயப்பட்ட ஒரு கொட்டில்தான்.

நான் அறிய மாலை நேரங்களில் படிக்க வேண்டியவர்கள் அந்த வீட்டிற்குள் நுழைந்து விடுவார்கள். லாம்பு உயரத்தில் தூக்கப்பட்டிருக்கும். ஒருவிதமான அமைதி அங்கு நிலவும். பனம்மட்டைகளினூடு இதமான காற்று உடல் மீது பட்டுக் கொண்டிருக்கும்.

யாரும் வெளியே சத்தம் போடமாட்டார்கள். 'பிள்ளைகள் பாக்குதுகள்', என்று மெதுவாகவே குசுகுசுப்பார்கள். அது வொரு அழகான காலம் என்று நினைக்கின்றேன்.

பின்னாளில் எல்லோரும் வீட்டில் படிப்பதற்கென்றே தனியறையை அப்பா கட்டி இருந்தார். புத்தகம் அடுக்க அலுமாரித் தட்டுகளும், இருந்தன. இரவு அப்பாவும் அம்மாவும், முற்றத்தில் அமர்ந்து பேசுவார்கள்.

இது போன்று எல்லா வீடுகளிலும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம் இல்லையா?

இப்பொழுது சும்மா ஒரு கோயிலில் அபிஷேகம் என்றால் ஒலிபெருக்கியைப் போட்டு சூழலை கெடுப்பது மாத்திரமன்றி பிள்ளைகளின் படிப்பையும் கெடுப்பது வழக்கம்.

ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகின்றது. நான் அப்பொழுது ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் ஊரில் எமது பகுதி மிகவும் நெருக்கமான பகுதி எங்கள் வீட்டில் இருந்து இரண்டு வீடு தள்ளி வெள்ளையண்ணை வீடு இருந்தது. வெள்ளையண்ணைக்கு பொன்னுத்துரையின் மில்லில் வேலை. அது நல்லதொரு காலம், தோட்டம் துரவு, நல்லமாதிரியாக இருந்தது. இதனால் மில்லில் நிறைய வேலை. போனால் வெள்ளை யண்ணைக்கு நல்ல சம்பளம்.

அவரது ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு கோணம். இதனால் ஏற்பட்ட கவலைகளால் வெள்ளையண்ணை குடிப்பது வழக்கமாகிவிட்டது. வெள்ளையண்ணை குடிச்சால் நசல் மிக நசல்.

ஒருநாள் என்னைப் பிடித்து இருத்தி வைத்துக்கொண்டு, கூடவே கணபதி என்று ஒருத்தர் அவர் பெட்டிக்காரர் (ஆர்மோனியம்) அவர் ஆர்மோனியம் இல்லாமலே ஆர்மோனியம் வாசித்தார். என்னை பிடித்து பாடுவித்தார்கள். மண்ணில் ஆர்மோனியம் கீறி, அதனில் "சரிகமபதநிஸ" வாசித்த முதல் பெட்டிக்காரர் அந்தக் கணபதிதான். நான் படித்த "அப்பம் முப்பழம்" தேவாரத்தோடு அந்த ஆர்மோனிய வாசிப்பு சரிதான்.

ஒருநாள் இரவு வெள்ளையண்ணை நன்றாக குடித்து விட்டு, ஏழு வீடு கேட்கக் கத்திக் கொண்டிருந்தார்.

பெண்ணைக் கைவிட்ட மருமகனையும் மாமனையும் திட்டிக் கொண்டிருந்தார். கூடவே ஓடிப்போய் திருமணம் செய்த மகளையும் திட்டிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது பெரியண்ணை O/L எடுக்க இரண்டு நாள்தான் இருந்தது. இதனால் அவனுக்கு வெள்ளையண்ணையின் சத்தம் இடைஞ்சலாக இருந்தது.

அம்மா "போய் எடுத்துச் சொல்லிப் போட்டு வாங்கோப்பா பொடியள் பாக்க வேணும்" என்றார்.

"உந்தான் கேட்க மாட்டுதப்பா! ஒருக்கா சொல்லிப் பார்ப்பம்"

என்றபடி அப்பா போய் வெள்ளையண்ணையை கூப்பிட்டு, "இஞ்சை வெள்ளை வீட்டில் பொடியள் படிக்குதுகள்"

"ஓமண்ணை"

"கொஞ்சம் சத்தம் போடாமல் படன் பாப்பம்"

"அண்ணா நீங்கள் சொல்லிப் [illegible] மனுசன். இனி வெள்ளை கத்தமாட்டான். அண்ணா, வெள்ளை தன்ரை நிம்மதிக்குத்தான் குடிக்கிறான். இனிக் கத்தமாட்டான். இது சத்தியம்!"

அப்பா ஆச்சரியத்துடன் திரும்பிவந்தார் "வெள்ளையும் நல்ல மனுசன்தான்??"

அப்பா வந்து தலைவாசலிற்குள் சாய்மனைக் கட்டிலில் படுக்கும்போது" - வெள்ளையின் குரல் பின்வருமாறு கேட்டது.

"வெள்ளை கத்தமாட்டான். வெள்ளை தன்ரை நிம்மதிக்குத் தான் குடிக்கின்றான்? வெள்ளை இனிக் கத்தமாட்டான்."

நாங்கள் நினைத்தோம் வெள்ளையண்ணை ஒரு பிரகடனத்திற்குக் கத்துகின்றார் என்று.

மீண்டும் ஒருதடவை கேட்டது. சரி இதோடை வெள்ளையண்ணை விட்டுவிடும் என்று நினைத்தோம். பிறகும் கேட்டது; கேட்டுக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு தடவையும் கேட்ஸ் (HZ) அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

'நாங்கள் படுக்கேக்கையும், அண்ணை பதினொரு மணிக்கு படித்துவிட்டு படுக்கேக்கையும்- வெள்ளை நன்றாக களைத்து விடியப் புறம் மூன்று மணிக்கு நித்திரையாகும் வரைக்கும்.

"வெள்ளை கத்தமாட்டான், வெள்ளை..... தன்ரை நிம்மதிக்குத்தான் குடிக்கின் றான்...... வெள்ளை இனிக் கத்தமாட்டான்.." என்று கேட் டுக் கொண்டே இருந்ததாக விடிய அம்மா சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் - சோழியபுரம்சம்பு நாதேஸ்வரர் சுவாமி

## சிவராத்திரி மஹோற்சவ விஞ்ஞாபனம்

15.02.2009 மு.ப. 10 மணியளவில் கொடியேற்றம்
23.02.2009 தேர்த்திருவிழா மாலை நான்கு யாமப் பூஜைகளும் இடம்பெறும்
24.02.2009 தீர்த்தோற்சவம்

"அனைவரும் வருக சிவனருள் பெறுக"

மஹோற்சவ பிரதமகுரு: சிவாகமபூஷண, சக்தி உபாசகர்,சாதகஇளவரசு
சிவஸ்ரீ சு.சுந்தர ஸ்ரீரங்கநாதக்குருக்கள்
[வழக்கம்பரை அம்மன் தேவஸ்தானம்].

(சி/557151) ஆலய பரிபாலன சபையினர்.

## கட்டடத் திறப்பு விழா

கோப்பாய், பெப்.14

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை அதிபர் இ.குணநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம், யாழ். மாவட்டக் கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், வலி.கிழக்குப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ்,நிக்கொட்பிரதித் திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், நிக்கொட் திட்டப்பொறியியலாளர் சி.சசிகரன், வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.(202-72)


# N.I. சயிக்கிள் ரியூப் உற்பத்தி மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

மொத்த விலை (ஒன்று)
ரூபா 175.00

நோர்தேண் இண்டஸ்ரீஸ்
69, பிறவுண் வீதி, கொக்குவில்.


யா/பன்னாலை சேர் கனகசபை
அ.த.க.பாடசாலையின்

## 153ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும்- 2008

காலம்: 14.02.2009 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 9.30 மணி
இடம்: பொன்னையா மண்டபம்
தலைவர்: திரு.சி.சிவராஜன் (பாடசாலை முதல்வர்)
பிரதமவிருந்தினர்: திரு.ப.விக்னேஸ்வரன்
(கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)
சிறப்பு விருந்தினர்: திரு.ச.கைலாசநாதன்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழை)
கௌரவவிருந்தினர்கள்: திருமதி ரதி நகலேஸ்வரன்
(உதவித் திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலகம், வலி.வடக்கு)
திரு.மா.சந்திரகாந்தன்
(முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)
திருமதி சிவமலர் அனந்தசயனன்
(அதிபர், யா/மகாஜனக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(82682)

அத்துடன் 2008ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் நீண்ட கால இடைவெளியின் பின் சித்திபெற்ற
ர.ஜினோத்ராஜ்
அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா.அ.சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

## கூட்டம்

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர்சங்கத்தின்பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் எஸ்.ரி.பத்மநாதன் தலைமையில் முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (204)

## உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ மங்களமிகு சர்வதாரி வருடம் மாசிமாதம் 3ஆம் நாள் (15.02.2009) ஞாயிற்றுக்கிழமை, ஷஷ்டி திதியும், சுவாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய காலை 8 மணி 30 நிமிடம் முதல் 10 மணிவரை உள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் பறாளாய் முருகன், திக்கரை முருகன் திருவருளாலும், பெரியோர்கள் ஆசியுடனும்,

| | |
|---|---|
| காரைநகர்,திக்கரை முருகமூர்த்தி கோயில் | சுழிபுரம் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் |
| சிவஸ்ரீ. குகனேசசர்மா பூமகாலட்சுமி | சிவஸ்ரீ. மு.பாலகுருசாமிசர்மா விசாலாட்சி |
| தம்பதியரின் பௌத்திரனும் | தம்பதியரின் தௌஹித்திரனும் |

எமது புத்திரனுமாகிய
சிரஞ்சீவி யதுர்சன் சர்மாவுக்கு



பறாளாய், சுழிபுரம். (82631)

உபநயன பிரம்மோபதேசம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்துள்ளதால் பறாளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வைபவத்திற்கு தாங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகை தந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன பிரமோபதேச குரு:
"முத்தமிழ்க் குருமணி" "வைதீகசாகரம்"
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
(கதிரமலை சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்)
சுபமஸ்து.

தங்கள் நல்வரவை நாடும்:
கு.சற்குணராஜசர்மா கிருபாகரி தம்பதியர்.


# இலங்கையின் முதற்தர சீமெந்துகளில் ஒன்றான...
# ரோக்கியோ நிறுவனத்தின்

# TOKYO SUPER
# சூப்பர் போட்லன்ட் சீமெந்து

TOKYO SUPER

உயர்ந்த தரம் உன்னத சக்தி நவீன தொழில்நுட்பம்




TOKYO CEMENT GROUP

No. 4691/1,Galle Road,Colombo 03,Sri Lanka.
Tel:2500466 Fax:2500897, E-Mail:tokyomkt@eureka.lk

MITSUI CEMENT

TOKYO SUPER TOKYO SUPER TOKYO SUPER


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை வருடத்திற்கு ஹமாஸ் யுத்த நிறுத்தம்

கொழும்பு, பெப். 14

இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பான ஹமாஸ் இயக்கம் காஸா நிலப்பகுதியில் சுமார் ஒன்றரை வருடகாலப்பகுதிக்கான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளது என்று எகிப்திய செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

ஹமாஸ் இயக்கத்திற்கும், இஸ்ரேலுக்குமிடையில் மத்தியஸ்தம் வகிக்கும் எகிப்து இஸ்ரேலிய போர் நிறுத்த அறிவித்தலை இன்னும் இரு நாள்களில் அறிவிக்கும் என ஹமாஸ் இயக்கப் பேச்சாளர் அபு மாசுக் தெரிவித்தார்.

இதுபற்றி தமக்கு எதுவும் தெரியாது என ஜெருசலேமிலுள்ள பிரதம மந்திரி ஒல்மாற்றின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலிய அரசுடன் நேரடியாக பேச மறுத்ததையடுத்து, எகிப்து மத்தியஸ்த முயற்சியை ஆரம்பித்தது. இரண்டு வருடத்திற்கு முன்பு ஹமாஸ் இயக்கம் தெற்கு இஸ்ரேலுக்கும் ஊடுருவி இராணுவ வீரர் சாலியற்றை பிடித்து வைத்திருக்கின்றது. அவரின் விடுதலை சம்பந்தமாக பின்பு பேச்சுகள் தொடரும் என்றும் பேச்ச ாளர் மார்சுக் தெரிவித்தார்.

இதேசமயம் எகிப்துக்குள் காஸாவிலிருந்து சுரங்க மூலம் ஊடுருவிய பலஸ்தீனியர் ஒருவரை எகிப்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் ஆயுதங்கள் வாங்குவதற்காக எகிப்துக்குள் ஊடுருவியதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலினால் சிறுவர்கள் உட்பட ஆயிரத்து 300 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். 5 ஆயிரத்து 500 பேர் காயமடைந்தனர். 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# குரேஷியாவில் காதலர் தீவு

ஐரோப்பியாவில் குரேஷியா நாட்டிலுள்ள ஒரு தீவு இதயவடிவில் அமைந்துள்ளது. களென்ஜாக் என்பது இதன் பழைய பெயர். இப்போது அதன் பெயர் காதலர்கள் தீவு. ஆள் இல்லாத இந்த தீவு 'கூகுள் எர்த்' என்ற இணையத்தளத்தில் இடம் பெற்றதும் இதற்கு மவுசு அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

3 இலட்சம் 90 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்ட இந்த தீவுதான் உலகிலேயே இதயவடிவில் அமைந்துள்ள ஒரே ஒரு தீவாகும்.

காதலர் தினத்தையொட்டி காதலர்கள் இந்த தீவுக்கு படை எடுக்கத்தொடங்கி விட்டனர். இங்கு உணவு, தண்ணீர் போன்ற வசதிகள் எதுவும் கிடையாது. அப்படி இருக்கும்போது எப்படி அவர்கள் சமாளிக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

# ஈராக்கில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் 36 பேர் பரிதாபப் பலி; 75 பேர் காயம்

கொழும்பு, பெப். 14

ஈராக் நாட்டில் தற்கொலைத் தாக்குதல் மற்றும் குண்டுவெடிப்பில் சிக்கி பொலிஸார் உட்பட 36 பேர் உயிரிழந்தனர். 75 பேர் வரை காயமடைந்தனர்.

பக்தாத் நகருக்குத் தெற்கே உள்ள இஸ்கன்டிறியா பகுதியில் சியா முஸ்லிம் யாத்திரிகர்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர். 25க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலை பெண் ஒருவரே மேற்கொண்டார் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

பக்தாத் நகரில் இருந்து மற்றைய நகரான கர்பலக்குச் சென்றுகொண்டிருந்தவர்கள் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

# தங்கம், வெள்ளியோடு புதைந்த கப்பல் செயற்கைக்கோள் மூலம் கண்டுபிடிப்பு!

லண்டன், பெப். 14

ஸ்பெயின் நாட்டுக்குச் சொந்தமான கப்பல் ஒன்று 1822 ஆம் ஆண்டு அமெரிக்கா டெக்சாஸ் நகரம் அருகே சென்றபோது, விபத்தில் சிக்கி கடலில் மூழ்கியது. அதில் 15 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளிகள் இருந்தன.

இந்தக் கப்பலை கண்டுபிடித்து தங்கம், வெள்ளி முதலியவற்றை வெளியே எடுக்க முயற்சி நடந்தது. ஆனால், கப்பல் மூழ்கிய இடத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில், அமெரிக்கா லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த இசையமைப்பாளர் நாதன்ஸ்மித் கப்பலை கண்டுபிடித்துள்ளார். உலகை செயற்கை கோள் மூலம் படம் பிடித்து காட்டும் 'கூகுள் எர்த்' இணையத்தளம் மூலம் கப்பலை கண்டுபிடித்தார். மெற்றல் டிக்ரெக்டர் கருவியுடன் நிபுணர்களை அழைத்துச் சென்ற அவர் கப்பல் மூழ்கி கிடக்கும் இடத்தை உறுதி செய்தார். அதன்பின்னர் தங்கம், வெள்ளியை எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

ஆனால், அவர் அவற்றை எடுக்க எதிர்ப்புத் தெரிவித்து அந்த பகுதியில் பண்ணை வைத்துள்ள ஒருவர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

சட்டப்படி புதைந்த பொருள்களை கண்டுபிடிக்கும் முதல் நபருக்கு அது சொந்தம். ஸ்மித்தின் வக்கீல் கூறும் போது, "அந்த இடம் நீர்ப்போக்குவரத்து வழியாக இருப்பதால் கப்பலிலுள்ள பொருள்கள் ஸ்மித்துக்கே சொந்தம்" என்றார்.

இரு தரப்புகளும் நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளன.

# விமானம் மோதி வெடித்ததில் அமெரிக்காவில் 48 பேர் பலி!

கொழும்பு, பெப். 14

அமெரிக்கா, நியுயோர்க், பவளோப் பகுதியில் வீடொன்றின் மீது கடந்த வியாழக்கிழமை இரவு விமானம் மோதி வெடித்துச் சிதறியது.



அதில் பயணம் செய்த 48 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

நியூயேசியாவில் இருந்து 48 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த விமானம் மழை காரணமாக இந்த விபத்தில் சிக்கியது என்று அங்குள்ள தொலைக்காட்சி சேவை ஒன்று தெரிவித்தது.

இந்த விமானம் வீழ்ந்து நொருங்கிய சத்தம் பாரிய பூகம்பம் போல் அதிர்ந்தது என்று அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தை தொடர்ந்து அப்பகுதியில் உள்ள மக்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். இச்சம்பவம் நடந்த இடம் புகை மண்டலமாக காட்சியளிக்கின்றது என்று அங்கிருக்கும் மக்கள் தெரிவித்தார்கள்.

# நீண்டதூர ஏவுகணையை பரீட்சிக்க வடகொரியா முயற்சி

கொழும்பு, பெப். 14

வடகொரியா தனது நீண்டதூர ஏவுகணை ஒன்றை இம்மாத முடிவில் கிழக்குக் கரையிலுள்ள தளம் ஒன்றிலிருந்து சோதித்துப் பார்க்கவுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டில் இது சோதிக்கப்பட்டபோது, தளத்திலிருந்து கிளம்பிய சில நொடிகளில் வெடித்து சிதறியது.

'ரேபோடேங் - 2' எனப்படும் இந்த ஏவுகணையின் முதலாவது, இரண்டாவது பகுதிகள் விசேட ரயில் மூலம் எடுத்து வரப்பட்டு, உழவு பார்க்கும் செய்மதிகளுக்கு தெரியாமல் இருப்பதற்காக உட்புறத்தில் பொருத்தப்படுவதாக 'சோசன் இல்போ' என்ற செய்தித்தாள் திடுக்கிடும் தகவலை தெரிவித்துள்ளது.

பாகங்களைப் பொருத்தும் வேலை நடைபெறுவதாக தென் கொரிய பேச்சாளர் தெரிவித்தார். இந்த ஏவுகணை 118 அடி உயர மானது. அத்தோடு இந்த ஏவுகணையை ஏவும் ஆயத்தங்கள் நடக்கும்போது அமெரிக்க உளவு செய்மதிகள் தகவலறிந்து சில நாள்களுக்கு முன்பே எச்சரிக்கையை விடுத்துவிடும். இந்த ஏவுகணை அமெரிக்காவின் ஒரு மாநிலமான அலாங்காவை நெருங்கும் வல்லமை கொண்டது.

# பாகிஸ்தானின் ஒப்புதலை வரவேற்கின்றது இந்தியா

புதுடில்லி, பெப்.14

கடந்த வருடம் மும்பைத் தாக்குதல்களில் சில திட்டங்கள் பாகிஸ்தானில் வகுக்கப்பட்டன என பாகிஸ்தான் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என இந்தியா தெரிவித்துள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்படும் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இரு நாடுகட்கும் இடையில் சுமூக உறவைப் புதுப்பிக்க இது முதற்படி என பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தடைசெய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா இயக்கத்தைச் சேர்ந்த எண்மர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பாகிஸ்தானிய உள்நாட்டமைச்சர் ரேமன் மாலிக் தெரிவித்தார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர் மத்தியில் பேசிய மாலிக் சந்தேக நபர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் இன்னும் இருவர் தேடப்படுகின்றனர் எனவும் தாக்குதல்காரர்கள் கராச்சியிலிருந்து படகு மூலம் புறப்பட்டு இந்தியாவை அடைந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இந்த ஒப்புதலை காஷ்மீரில் இயங்கும் 'ஐக்கிய ஜிகாட் சபை' மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது. பாகிஸ்தான், அமெரிக்காவும் அடிபணிந்துவிட்டது எனவும் அது மேலும் அறிவித்துள்ளது.


## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 14.02.2009 விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ P.ரவி - சாவகச்சேரி.
★ சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.
★ திருமகள்களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி.


## சேர்த்து வாசிக்கவும்

நேற்றைய (13.02.2009) உதயனில் 2 ஆம் பக்கத்தில் வெளியான திருமதி ஜெசிமேரி இராசேந்திரம் என்பவரின் மரண அறிவித்தலில் பிள்ளைகளின் விவரங்களில் கிறிஸ்ரோப்பர் ஜோர்ஜ் இராசேந்திரன் (குழந்தை - இந்தியா) என்ற பெயர் தவறுதலாக விடுபட்டுள்ளது. அதனையும் சேர்த்து வாசிக்கவும்.

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் கழகத்தின் செயற்திட்ட வளர்ச்சிக்காக 2009.02.15 ஆம் திகதி அதிஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 2009.03.15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சீட்டில் குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

செயலாளர்
தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம், கொடிகாமம்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பதில் அதிபர்
திருமதி க.இல்ட்சுமிகாந்தன் அவர்களின் மைத்துனர்

### சோதிலிங்கம் பஞ்சலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணார்பண்ணை.

பாடசாலை சமூகம்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்கள்

### இராசையா பத்மநாதன் (புகையிலை வர்த்தகர்)



சரவணை கிழக்கு, மயில்ப்புலத்தை பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வாழ்விடமாகவும் தற்போது பிறவுண் வீதி(மலர்வாசா), யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையாபத்மநாதன்(பற்பன்) 13.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-அமிர்தவல்லி தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம்- அன்னம்மா தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் லக்ஷிகா(யா/வேம்படி மகளிர் கல்லூரி கணிதபிரிவு 2009), ஜெயந்துஷா(யாழ்.இந்து மகளிர் கல்லூரி வர்த்தகப்பிரிவு 2010) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகேஸ்வரி, கனகநாயகம் (பிரான்ஸ்), சிவலிங்கம்(கனடா), மகாலக்சுமி (பிரான்ஸ்), புஸ்பராணி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் குருமூர்த்தி(இளைப்பாறிய கிராம அலுவலர்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), லீலாவதி(கனடா), பூபாலசிங்கம்(பிரான்ஸ்), குகணேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.02.2009) ஞாயிற்றுகிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மலர்வாசா"
211, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி கமலாதேவி,
பிள்ளைகள்.

### திருமதி தவமலர் தெய்வேந்திரம்

புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமலர் தெய்வேந்திரம் 13.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் குட்டி தெய்வேந்திரத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சரவணைநாகமுத்து - பாக்கியம் தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு குட்டி-இலட்சுமி ஆகியோரின் மருமகளும், மதிவதணியின் (ஆசிரியை, யா/மத்திய கல்லூரி) சகோதரியும், சு.ஜெயந்தனின் (தபாலகம் அச்சுவேலி) மைத்துனியும் சசிகரன் (ஹொலண்ட்), சதீஸ்வரன், சிவாகரன், ஜெசிந்தன், நவநீதன் ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.02.2009) சனிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

தகவல்:
கு.தெய்வேந்திரம் (கணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலுள்ள இராணுவ நிபுணர்களை இந்தியா உடன் திருப்பி அழைக்கவேண்டும்!

## டாக்டர் ராமதாஸ் வலியுறுத்து

சென்னை, பெப்.14

போரை நிறுத்தாவிட்டால், இலங்கையில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிபுணர்களை உடனடியாகத் திரும்ப அழைக்க வேண்டும் - என்று மத்திய அரசுக்கு டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சின் மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும், அதற்கு முதலில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்திய நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவரின் உரையின் வாயிலாக இந்தியப் பேரரசு அறிவித்திருக்கிறது.

இலங்கையில், தமிழினப்படுகொலைக்கு காரணமான போர் நிறுத்தப்பட வேண்டும் என்றும், அதற்கு இந்திய பேரரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழகத்தில் அனைத்து தரப்பினரும் கொந்தளித்துக் குரல் எழுப்பி வருகிறார்கள். அதற்கு இப்போது ஓரளவு பலன் கிடைத்திருக்கிறது.

போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு விடுதலைப்புலிகளும், இலங்கை அரசும் பேச்சின் மூலம் அனைத்துத் தரப்பு மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை காண வேண்டும் என்று இந்தியா அறிவித்திருப்பதும் ஆறுதல் அளிப்பதாக உள்ளது.



இந்த ஆறுதலான நிலைப்பாடு இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு நிலைப்பாடாக மாற வேண்டும். போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலுக்கு இலங்கை அரசு உடனடி யாக செவி சாய்க்காவிட்டால், அடுத்த கட்டமாக இலங்கையில் உள்ள அனைத்து தொழில் நுட்ப உதவியாளர்களையும் இந்தியா உடனடியாக திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டும்.

போரை ஊக்கப்படுத்தும் வகையில் எந்த உதவிகளையும் அளிக்க மாட்டோம் என்று எச்சரிப்பதுடன், இதுவரையில் அத்தகைய உதவிகளை அளித்து வந்திருந்தால் அவற்றையும் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும்.

அத்துடன் போரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் வகையில் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை பன்னாட்டு சேவை நிறுவனங்கள் மூலம் வழங்கவும் இந்தியா முன்வரவேண்டும்.

இத்தகைய ஆதரவு நடவடிக்கைகளின் மூலம் இலங்கை அரசைப் பணிய வைக்க முடி யும். எனவே, அடுத்த கட்டமாக இத்தகைய நடவடிக்கைகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் - என்றுள்ளது.

## சென்னையில் மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்புப் போர்

தமிழீழத்தில் எம் உறவுகளை இனப் படுகொலை செய்து வரும் சிங்கள அரசை எதிர்த்தும் அதற்கு உடந்தையாக இருக்கும் இந்திய அரசை கண்டித்தும் சென்னையில் பொறியியல் கல்லூரி மாணவர்கள் நேற்றுமுன்தினம் வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தினர்.

இலங்கைக்கு இந்திய அரசு அனுப்பியுள்ள தன் துருப்புகளையும் ஆயுதங்களையும் திரும்பப்பெற வேண்டும், தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும், ஈழத்தில் நடக்கும் இனப் படுகொலையைத் தடுத்து நிறுத்தி தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும்படியான ஒரு அரசியல் தீர்வை முன்னெடுக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளையும் அவர்கள் வலியுறுத்தினர்

## போர் நிறுத்தத்தை வலியுறுத்தி நாடாளுமன்றருகே 17இல் மறியல்

போர் நிறுத்தம் கோரி எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றம் எதிரில் மீண்டும் மறியல் நடத்துவதற்காக, ஈழத் தமிழர் தோழமைக் குரல் அமைப்பினர் நாளை டில்லி புறப்படுகின்றனர் என ஈழத் தமிழர் தோழமைக் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பா.செயப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும், புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும், போருக்கு இந்திய அரசு துணை நிற்கக் கூடாது என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, ஈழத் தமிழர் தோழமைக் குரல் அமைப்பினர், நாடாளுமன்றம் எதிரில் கடந்த வியாழக்கிழமை போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், மீண்டும் எதிர்வரும் 17ஆம் திகதி மறியல் நடத்துவதற்காக இந்த அமைப்பின் இரண்டாவது குழுவைச் சேர்ந்த 200 பேர், நாளை ஞாயிற்றுக்கிழமை சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இருந்து புறப்படுகின்றனர்.

மேலும் புதுடில்லியில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் நூற்றுக்கணக்கானோர் இந்த போராட்டத்தில் கலந்துகொள்ள இருக்கின்றனர் என அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பா.செயப்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

# பிணம் நிறைந்து - சுடுகாடாக மாறுகிறது ஈழம் கண்டும் காணாமல் இருக்கின்றது இந்திய அரசு!

## ஈழத் தமிழ் ஆதரவு அக்கினிப்புயல் சீமான் குமுறல்

கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். எல்லா நாடுகளிலும் மண்வாசனை வீசும். ஆனால் இலங்கையில் பிண நாற்றம் வீசுகிறது. ஒரு நாடே - ஈழமே சுடுகாடாக மாறியுள்ளது - என்று அக்கினிப்புயல் சீமான் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போரை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி புதுச்சேரி பாரதியார் பல்கலைக்கூட மாணவர்கள் 9 பேர் கடந்த புதன்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் 2ஆவது நாளாக போராட்டம் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். எல்லா நாடுகளிலும் மண்வாசனை வீசும். ஆனால் இலங்கையில் பிண வாசனை வீசுகிறது.



ஒரு நாடே சுடுகாடாக மாறியுள்ளது. லண்டனில் சீக்கியருக்கு அவமதிப்பு நேர்ந்தால் பிரதமர் மன்மோகன்சிங் துடிக்கிறார்.

அரபுநாட்டில் மலையாளிகளுக்கு பிரச்சினை என்றால் கேரள மக்கள் துடிக்கின்றனர். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் கேரள அமைச்சர்கள் உடனடியாக நடவடிக்கையில் இறங்குகின்றனர். ஆனால் இலங்கையில் தமிழர்கள் கும்பல் கும்பலாகக் கொல்லப்படுகின்றனர்.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எலிகளையும், தவளைகளையும் அறுத்துப் பழகுவது போல சிங்களவர்கள் தமிழர்களைச் சுட்டுப் பழகுகின்றனர். இதனைக் கேட்க நாதியில்லை. தமிழர்களின் உடல்களை சிங்கள இராணுவம் வீதிகளில் வீசிச்செல்கிறது. இதற்கு இந்திய அரசு கண்டும் காணாமல் துணை நிற்கிறது.

இதனை வன்மையாக கண்டிக்க வேண்டும். சாவை மதிக்காத இடத்தில் சாக துணியும் போராட்டத்தில் இறங்கியிருக்கும் உங்களை மதிக்கிறேன். பாராட்டுகிறேன் - என்றார்.




## போர் நிறுத்தம் கோரி மொட்டமலையில் இலங்கை அகதிகள் உண்ணாவிரதம்!

விருதுநகர் மாவட்டத்திலுள்ள மொட்டமலை ஈழ அகதிகள் முகாமில் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.



ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்படும் இந்திய - இலங்கைக் கூட்டு நடவடிக்கைளைக் கண்டித்தும் கைவிடக் கோரியும் 800க்கும் அதிகமான ஆண்களும் பெண்களும் சிறார்களும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிகழ்ச்சிக்கு ஆதரவு தெரிவித்து சிறப்புரை ஆற்றிய தமிழர்கழத்தின் பரப்புரைப் பொறுப்பாளர் அந்தோனி வியாகப்பன் தெரிவித்தவை வருமாறு -

ஈழத் தமிழரையும் தமிழ்நாட்டுத் தமிழரையும் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்கு ஈழத்துக் களமுனை முடிவு கட்டி இன்று தாய்த் தமிழகமே கிளர்ந்து எழுந்து குமுறுகிறது. தமிழர்கழகம் எப்போதும் இந்தப் போராட்டங்களில் முன்னின்று குரல் கொடுக்கும்

சிங்கள திராவிட - இந்தியக் கூட்டணியை நாம் வலுவாக எதிர்த்து வெற்றி கொள்ள வேண்டுமானால், உலகப் பரப்பில் வாழும் தமிழரெல்லாம் பூசல்களை மறந்து இனமான உணர்வுக்கு மட்டுமே முதலிடம் தந்து எழவேண்டும் - என்று அழைப்பு விடுத்தார். போராட்டத்தில் தமிழ் ஆர்வலர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தனர்.

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு காணவேண்டும்

### பா.ஜ.க. திருநாவுக்கரசு வலியுறுத்து

மோதல்களினால் பாதிக்கப்படுகின்ற இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது - என்று இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் தேசிய செயலர் எல். திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப்பகிர்வின் ஊடாக தீர்வு காணப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்கும் அமைப்புடன் தமது கட்சி சில நிபந்தனைகளை முன்வைத்தே இணைந்து கொண்டது என்றும் -

இவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட முடியாது என்ற ஒரு நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார்.

## ஜனாதிபதி பிரதீபா போர் நிறுத்தத்தை வலியுறுத்தி பேசியது ஆறுதலளிக்கிறது

### முதல்வர் கருணாநிதி அறிக்கை

இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி பிரதீபா பட்டீல் பேசியமை ஆறுதல் அளிக்கிறது - என்று முதல்வர் கருணாநிதி அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

நாடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் 12ஆம் திகதி (வியாழன்) உரையாற்றிய ஜனாதிபதி தனது உரையில், இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்றும், பிரச்சினைக்கு அமைதியான முறையில் இரு தரப்பிலும் பேச்சுகள் மூலம் தீர்வுகாண வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

இது, மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு மருத்துவக்கண்காணிப்பில் இருந்து வரும் எனக்கு மிகுந்த ஆறுதலையும் மகிழ்ச்சியையும் தருவதாக அமைந்துள்ளது - என்றுள்ளது.

## இலங்கை அரசைப் பணியவைக்கும் பொறுப்பு இந்திய அரசுக்கே உண்டு என்கிறார் திருமா!

இலங்கையில் போரை நிறுத்தவும், பேச்சு நடத்து வதற்கும் உரிய ஏற்பாடுகளை செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும் - என்று விடுதலைச் சிறுத் தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து, வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு-

இலங்கையில் பாதுகாப்புப் பகுதி நோக்கி இடம்பெயர்ந்த தமிழ் மக்களைச் சுட்டுக் கொலை செய்தது பெண் புலிகள்தான் என அந்த நாட்டு அரசு கூறியுள்ளது.

சர்வதேச அளவில் புலிகள் மீது நன்மதிப்போ, பரிவோ ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக இலங்கைப் படையினர் சுமத்திய வீண் பழியே இந்தக் குற்றச்சாட்டு.

போரை நிறுத்தவோ, மனித உரிமைகளை மதிக்கவோ தாம் தயாராக இல்லை என்பதை இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்து விட்டது. மக்களின் இன்றியமையாத தேவைகளான உணவு, குடிநீர், மருந்து போன்றவை தடுக்கப்பட்டுள்ளன.

மனிதநேயமற்ற இந்த இனவெறியாட்டத்தை நடத்தி வரும் இலங்கை அரசைப் பணிய வைக் கும் பொறுப்பும், கடமையும் அதற்குரிய வலிமையும் இந்திய அரசுக்கே உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை 'ஒன்றிணைந்த தமிழர் பகுதி' என அறிவிப்பதற்கும் போரை நிறுத்தவும் பேச்சு நடத்தவும் உரிய ஏற்பாடுகளை செய்ய இந்திய அரசு முன்வர வேண்டும்.

## இலங்கைக் கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர் வேலைநிறுத்தம்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திவரும் தொடர் தாக்குதல்களைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இராமேஸ்வரம் சங்குமால் பகுதியிலிருந்து கடந்த வாரம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற 30 நாட்டுப் படகு மீனவர்களை, இலங்கை கடற்படையினர் தாக்கி ஜி.பி.எஸ்., செல்போன்களை பறித்துக் கொண்டு விரட்டியடித்தனர்.

3 நாள்களுக்கு முன் பாம்பன் பகுதியிலிருந்து 3 படகுகளில் சென்ற 15 மீனவர்களை விரட்டியடித்தனர். இதனால், தமிழக மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்துவதைத் தடுக்க, மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த 1,500 நாட்டுப் படகுகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

மீனவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்குள் செல்லவில்லை. இதனால், ராமேஸ்வரம் பகுதியில் சீலா, முரல், வாவல் போன்ற மீன்கள் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய - நியூஸிலாந்து இறுதி ஆட்டம் மழையால் ரத்து!
# பரபரப்பான தொடர் சமநிலையில் முடிவு!

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் நேற்று இடம் பெற்றது.

ஏற்கனவே நடைபெற்ற நான்கு போட்டிக ளில் இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றியீட்டி சம நிலை வகித்தன. இந்நிலையில் வெற்றியைத் தீர்மானிப்பதற்கான கடைசிப் போட்டி நேற்று நடைபெற்றது.

பரபரப்பான ஆட்டத்தின் முக்கியமான தருணத்தில் மழை குறுக்கிட்டதன் காரணமாக போட்டி இரத்துச் செய்யப்பட்டது.

ஆரம்பத்திலேயே மழை பெய்ததால் ஆட்டம் 22 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, 22 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 14 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. அதனைத் தொடர்ந்து ஆட்டம் நிறுத்தப்பட்டது.

நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 73 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்த நிலையில் எம். குப்டிலும் பீ. டயமண்டியும் 7 ஆவது விக்கெட்டுக்காக 50 ஓட்டங்களைப் பெற்று அணியை வெற்றியை நோக்கி இட்டுச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே மழை குறுக்கிட்டது. குப்டில் அவ்வேளை 34 பந்துகளில் 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவுஸ்திரேலிய அணி சார்பாக கடின் 97 பந்துகளில் 88 ஓட்டங்களைப் பெற்றார். பெர்குஷன் 46 பந்துகளில் 55 ஓட்டங்களைப் பெற்றார். நியூஸிலாந்து அணிக்காக மில்ஸ் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனையடுத்து ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் சம நிலை அடைந்தன.

இந்தப் போட்டித்தொடரின் நாயகனாக அவுஸ்திரேலிய அணி வீரர் மைக் ஹஸி தெரிவுசெய்யப்பட்டார்.

## நியூஸிலாந்து சுற்றுலாத்துறை டோனிக்கு அழைப்பு

புதுடில்லி, பெப்.14

நியூசிலாந்து சுற்றுப்பயணத்தின் போது பங்கி ஜம்ப் விளையாட்டில் ஈடுபடுமாறு இந்திய கேப்டன் டோனிக்கு அந்நாட்டு சுற்றுலாத் துறை அழைப்பு விடுத்துள்ளது. காலில் கயிறு கட்டிக் கொண்டு உயரமான கோபுரம் போன்ற இடங்களிலிருந்து குதிக்கும் சாகச விளையாட்டு பங்கி ஜம்ப் என்று குறிப்பிடப்படுகிறது.

நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து நகரில் அமைந்திருக்கும் துறைமுக பாலத்திலிருந்து பங்கி ஜம்ப் செய்வது மிகவும் பிரபலமாக உள்ளது. சுற்றுலா பயணிகள் இதனை மிகவும் விரும்புகின்றனர்.

இந்திய அணி நியூசிலாந்து வரும் போது இந்திய கேப்டன் டோனி, பங்கி ஜம்ப் செய்து பார்க்க வேண்டும் என்று ஆக்லாந்து சுற்றுலாத் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

டோனி மிகவும் வேகமாக பைக் ஓட்டிச் செல்வதில் விருப்பம் உள்ளவர் என்பதால் அவர் இந்த சாகச விளையாட்டை விரும்புவார் என்று ஆக்லாந்து சுற்றுலாத் துறை கருதுகிறது.

ஏற்கனவே கால்பந்து நட்சத்திரம் டேவிட் பெக்காம், கோல்ப் வீரர் டைகர் உட்ஸ் ஆகியோர் இங்கு பங்கி ஜம்ப் செய்திருக்கின்றனர்.

## ஐ.பி.எல். தலைவர் மோடி மீது மீண்டும் ஒரு மோசடிப் புகார்

ஜெய்ப்பூர், பிப்.13:

இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் தலைவர் லலித் மோடி மீது மேலும் ஒரு மோசடி புகார் எழுந்துள்ளது.

ஏற்கனவே ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவர் போட்டியில் கலந்து கொள்வதற்காக, உள்ளூரில் நிலம் வாங்கியதில் போலி ஆவணங்களை தாக்கல் செய்தார் என புகார் செய்யப்பட்டுள்ள நிலையில், முதலாவது ஐ.பி.எல் போட்டியின்போது வாக்களித்தபடி ரூ.6 கோடி வைப்புச் செய்யாமல் ஏமாற்றியதாக புது வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது.

இது குறித்து நாக்ரிக் மோர்ச்சா மாநில அமைப்பாளர் பண்டிட் சுரேஷ் மிர்சா கூறியதாவது:

முதலாவது ஐபிஎல் தொடரின் போது, ஜெய்ப்பூர் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் முதல்வர் நிவாரண நிதியாக ஐபிஎல் சார்பில் ரூ.6 கோடி வழங்கப்படும் என்று மோடி உறுதி கூறினார்.

ராஜஸ்தான் ரோயல்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகளிடையே மே 17ம் திகதி நடந்த போட்டியின் முடிவில் இதற்கான காசோலையை மோடி வழங்கினார்.

ஆனால், இதுவரை ஸ்பான்சர் கம்பெனிகளிடம் இருந்து ரூ.4 கோடி மட்டுமே வைப்புச் செய்யப்பட்டுள்ளது. மீதி ரூ.2 கோடி எங்கே போனது என்பதே தெரியவில்லை.

போட்டியை நடத்துவதற்காக பொய்யான வாக்குறுதி கொடுத்து ஏமாற்றிய மோடி மீது காவல் நிலையத்தில் புகார் செய்ய உள்ளோம். இவ்வாறு சுரேஷ் மிர்சா கூறியுள்ளார்.

## டெஸ்ட் தரவரிசையிலும் ஆஸியை முந்துவோம்;தென்னாபிரிக்க பயிற்சியாளர் தெரிவிப்பு

டர்பன், பிப்.12:

டெஸ்ட் தரவரிசையிலும் ஆஸ்திரேலியாவை தமது அணி முந்தும் என தென் ஆபிரிக்க பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் தெரிவித்தார்.

இம்மாத இறுதியில் தென் ஆபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் அவுஸ்திரேலியா, 3 டெஸ்ட், 5 ஒரு நாள் ஆட்டங்கள், 2 ருவெண்டி20 ஆட்டங்களில் பங்கேற்கிறது.

ஏற்கெனவே ஒரு தின ஆட்டங்களுக்கான ஐசிசி தரவரிசையில் அவுஸ்திரேலியாவை பின்னுக்குத் தள்ளி முதலிடத்தை தென்னாபிரிக்கா பெற்று விட்டது.

டெஸ்ட் தரவரிசையில் அவுஸ்திரேலியா 126 புள்ளிகளுடன் முதலிடத்திலும், தென் ஆபிரிக்கா 121 புள்ளிகளுடன் 2-வது இடத்திலும் உள்ளன.

இந்நிலையில், தென் ஆபிரிக்கப் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் கூறியதாவது:

அவுஸ்திரேலிய அணியை சொந்த மண்ணிலேயே தோற்கடித்து பேட்டிங்கிலும், பந்துவீச்சிலும் எவ்வளவு வலுவானவர்களாக உருவாகியுள்ளோம் என்பதை நிரூபித்துள்ளோம்.

தரவரிசையில் முதலிடம் பெற வாய்ப்புள்ளது என்பதனாலேயே அவுஸ்தி ரேலியாவுடனான தொடரை வீரர்களும், ஆதரவாளர்களும் மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கியுள்ளனர் என்றார்.

தாயகத்தில் சொந்த மக்களின் முன்னிலையில் விளையாடுவதற்கு அணி வீரர்கள் அனைவரும் ஆர்வமாக உள்ளோம் என்கிறார் தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரேம் ஸ்மித்.

விக்கெட் காப்பாளர் மார்க் பௌச்சர் காலில் காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார். தொடர் தொடங்குவதற்கு முன் அவர் முழு உடற் தகுதி பெற்று விடுவார் என நம்புவதாகவும் ஸ்மித் குறிப்பிட்டார்.

கிரேம் ஸ்மித்துக்கு காயம் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒரு தினத் தொடருக்கு ஜோஹன் போதா தலைமையேற்றார்.

எனினும், டெஸ்ட்களுக்கும், ஒரு தினத் தொடருக்கும் தனித்தனி கப்டன்களை நியமிக்கும் உத்தேசம் அணி நிர்வாகத்துக்கு இல்லை என கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாக அதிகாரி ஜெரால்ட் மயோலா தெரிவித்தார்.

டெஸ்ட் தொடருக்கு அறிவிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்க அணி: கிரேம் ஸ்மித் (தலைவர்), ஹஷிம் ஆம்லா, மார்க் பௌச்சர் (விக்கெட் காப்பாளர்), ஜக்ஸ் கலிஸ், ஏபி டிவில்லியர்ஸ், நீல் மெக்கென்சி, ஜே.பி.டுமினி, போல் ஹரிஸ், மோர்ன் மோர்கெல், மகாயா நிற்னி, டேல் ஸ்ரெய்ன், லோன் வாபோ சோட்சோப்.

## தாய்லாந்து டென்னிஸ் போட்டி : காலிறுதியில் சானியா மிர்ஷா



பாங்காங், பிப்.13:

தாய்லாந்து டென்னிஸ் போட்டியில் இந்திய வீராங்கனை சானியா மிர்ஷா ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இரட்டையர் பிரிவில் அவர் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். தாய்லாந்தில் நடைபெற்று வரும் பட்டையா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்திய வீராங்கனை சானியா மிர்சா விளையாடி வருகிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவில் 2 ஆவது சுற்று ஆட்டத்தில் அவர் ரஷ்யு வீராங்கனை விட்டாலியாவை எதிர்த்து ஆடினார்.

இந்த ஆட்டத்தில் அவர் 6-4, 6-0 என நேர் செட்களில் வெற்றி பெற்றார். முதல் சுற்று ஆட்டத்தில் போராடி வெற்றி பெற்ற சானியா, 2-வது சுற்றில் எளிதாக வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

காலிறுதியில் அவர் தாய்லாந்து வீராங்கனை யை எதிர்த்து ஆடுகிறார். இதனிடையே இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார். இரட்டையர் பிரிவில் சானியா மிர்ஷா இத்தாலிய வீராங்கனை மாராவோடு ஜோடியாக விளையாடுகிறார்.

## நியூஸிலாந்துடனான ருவென்ரி 20 போட்டியில் இந்திய அணியில் சச்சின் டெண்டுல்கார் இல்லை



மும்பை, பிப்.13:

நியூஸிலாந்து அணியுடன் நடக்கவுள்ள இரண்டு ருவென்ரி 20 போட்டியிலும் விளையாடப்போவதில்லை என்று சச்சின் டெண்டுல்கர் கூறினார்.

இது குறித்து அவர் நேற்று கூறியதாவது: நியூஸிலாந்து தொடரில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடு வேன். ருவென்ரி 20 போட்டியில் விளையாடமாட்டேன்.

டோனி தலைமையில் ருவென்ரி 20 உலகக் கோப்பையை வென்ற அணியில் எந்த மாற்றமும் செய்யப்படுவதை நான் விரும் பாததே இதற்கு காரணம். எல்பிடபுள்யூ உட்பட நடுவர்களின் முடிவுகளை எதிர்த்து அப்பீல் செய்யும் முறை ஏற்கத்தக்கதல்ல. நடுவர்கள் சில சமயம் தவறுகள் செய்தாலும், முழுக்க முழுக்க டிவி ரீப்ளேயை நம்புவது சரியல்ல. இவ்வாறு சச்சின் கூறினார்.

## மஹேலவின் விலகல்;முரளிதரன் அதிர்ச்சி

*கொழும்பு, பெப்.14*

*மஹேல ஜயவர்த்தன தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது குறித்து இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திரச் சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் அதிர்ச்சி வெளியிட்டுள்ளார்.*

*மஹேல ஜயவர்த்தன சில காலமாகவே இது குறித்து தெரிவித்து வந்தார். எனினும் இவ்வளவு வேகமாக இந்த முடிவை எடுப்பார் என தான் எதிர்பார்க்க வில்லையென்றும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.*

*மஹேலவின் பதவி விலகலுக்கு மைதானத்துக்கு அப்பாற்பட்ட விடயங்களும் காரணமாக இருக்கலாம். அரசியல் அழுத்தங்களும் இந்த முடிவை அவர் எடுப்பதற்குத் தூண்டியிருக்கலாம் என்றும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.*

*மஹேலவின் அணித் தலைமையையும் அவர் பாராட்டியுள்ளார். அவர் இளம் வீரர்களை சிறப்பாக வழிநடத்தியவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.*

## மலேசிய கிரிக்கெட் அணியுடனான தொடரில் இலங்கை துறைமுக கிரிக்கெட் அணி வெற்றி

மலேசியா கோலாம்பூர் பஹாமாஸ் டவால் விளையாட்டரங்கில் இலங்கைத் துறைமுக கிரிக்கெட் அணிக்கும் மலேசிய கிரிக்கெட் அணிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இலங்கைத் துறைமுக அணி 3:0 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மலேசிய அணி 39.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களைக் கைப்பற்றியது. எஸ். ஸாரிப் (21), எம். பௌஸி (18), எஸ். நிஷாமா (28) ஆகியோர் சிறப்பாக ஆடினர். இலங்கை அதிகார சபை அணியின் பாரிஸ் 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், லஸ்ஸன டயஸ் 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கைத் துறைமுக அதிகார சபை அணி 45 ஓவர்களில் 08 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. லஸ்ஸன டயஸ் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் ருக்ஷான் சமரதீர 27 ஓட்டங்களையும் இந்திக்க பெரேரா 28 ஓட்டங்களையும் பெற்றனர். மலேசிய வீரர் ஸியாட் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இரண்டாவது போட்டியில் இலங்கைத் துறைமுக அதிகார சபை 41 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

ஆர். சம்பத் 26, ஆர். சமரதீர 17, இந்திக்க பெரேரா 16, லஸந்த பெரேரா 16 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மலேசிய கிரிக்கெட் அணி 30.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

லஸ்ஸன டயஸ் 19 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், எஸ். குணதிலக்க 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மூன்றாவதும் இறுதியுமான ஆட்டத்தில் இலங்கைத் துறைமுக அதிகார சபை 40 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது. ஷிஹான் டீ. சில்வா 77, ரந்திக்க சம்பத் 34, எஸ். சீமன் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களைப் பெற்றனர்.

மலேசிய கிரிக்கெட் அணியின் பவித்ரன் 55 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கமருன் 27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மலேசிய அணி 40 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இப்போட்டியில் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவரான இந்திக்க பெரேராசிறந்த கிரிக்கெட் நேர்முக வர்ணனையாளராகவும், இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தொடர்பாடல் மற்றும் முகாமையாளர் நளின் அபொன்ஸ் துறைமுக அதிகார சபையின் கிரிக்கெட் குழுவின் முகாமையாளராகவும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்கள் கப்பலில் இருந்து இறக்கப்படுவதை படங்களில் காணலாம்.

# வன்னியிலிருந்து வெளியேறும் மக்களுக்கு 3 வருடங்கள் அகதிமுகாம் வாழ்க்கையா?

## மனிதாபிமான அமைப்புகள் எதிர்ப்பு

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வருகை தரும் மக்களை மூன்று வருட காலத்துக்குத் தங்க வைப்பதற்கு அரசு உரு வாக்கவுள்ள நலன்புரிக் கிராமங்களை தடுப்பு முகாம்கள் என சர்வதேச மனிதாபிமான அமைப்புகள் வர்ணித்துள்ளன. மக்களை மூன்று வருடங்களுக்கு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கும் திட்டத்துக்கு பிரிட்டனும் கடும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளது.

வன்னியிலிருந்து மிகவும் பலவீன மான நிலையில் வருகின்ற இந்த மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்த நிலையிலேயே இருக்கச்செய்வது எவரின் நலனுக்கும் உகந்ததல்ல,என பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வன்னியிலிருந்து வரும் மக்களை மூன்று வருட காலத்துக்குத் தடுத்து வைப்பது குறித்து அச்சம் வெளியிடப் பட்ட பின்னர் அரசு புதிய யோச னையை சமர்ப்பிக்க இணங்கியுள்ளது என்று யு.என்.எச்.சி.ஆர். குறிப்பிட்டுள்ளது.

''இந்த முகாம்களை அரசியல் கைதிகளின் தடுப்பு முகாம்கள் என நான் சொல்லப்போவதில்லை. ஏனென்றால், ஏற்கனவே இவை தடுப்பு முகாம் களாகவும் விசாரணை நிலையங்களாகவும் விளங்குகின்றன'' என நாடாளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தெரிவித்துள்ளார். சர்வதேச சமூகமே இவற்றைக் கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை கண் காணிப்பகம் இடம்பெயர்ந்த மக்களுக் கென வவுனியாவில் அமைக்கப்படும் முகாம்கள் தடுப்புக்காவல் நிலையங்கள்எனத் தெரிவித்துள்ளது.

''இலங்கை அரசு அமைக்க உத்தேசித்துள்ளது நலன்புரி முகாம்கள் அல்ல, யுத்தக் கைதிகளுக்கான தடுப்பு முகாம்'' என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக் குத் தலைமை வகித்த சில மாதங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த றொபேர்ட் இவானஸ் வர்ணித்துள்ளார்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மிகவும் அத்தியாவசிய சூழ் நிலைகளில் மாத்திரம் தடுத்து வைக்கலாம் என இடம்பெயர்ந்தோருக்கான ஐக்கிய நாடுகளின் வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளமையை சுட்டிக் காட்டியுள்ள மனித உரிமை கண்காணிப்பகம் அரசின் புதிய யோசனைகள் இதனை மீறும் செயல் எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசு சர்வதேச உதவியை எதிர்பார்க்கிறது. ஆனால், ஏனைய விடயங்களில் சர்வதேச தராதரங்களைப் பின்பற்றுவதில்லைஎன மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. (அ-சி)

### முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்ட அவசர கோரிக்கையை யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தர நாயகம் ஜனாதிபதியிடம் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்று மாலை இக்கோரிக்கை அடங்கிய கடிதத்தை ஆயர் அனுப்பியுள்ளதாக ஆயரின் செயலாளர் றொசான் அடிகளார் தெரிவித்தார்.

யாழ். ஆயர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்துவரும் மக்களை வவுனியாவுக்கு அழைத்துச்சென்று தங்க வைப்பதால் அவர்கள் தமது உறவினர்களில் இருந்து பிரிக்கப்பட்டு விடுவார்கள்; தனிமைப் படுத்தப்பட்டு விடுவார்கள்.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு இடம் பெயர்ந்தவர்களை அவர்களது சொந்த இடங்களில் அதாவது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனில் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர் எனில் கிளிநொச்சியிலும் தங்கவைக்க வேண்டும்.

தென்மராட்சி, மிருசுவில், பளை ஆகிய இடங்களில் இடைத்தங்கல் முகாம்களை அமைத்து அவர்களைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அந்த மக்கள் சொந்த இடங்களில் அமைதியாக வாழ இது உதவும் - என்று கூறப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் யாழ்., வன்னி அரச அதிபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.


தொடர் மாதிரிப் பரீட்சை- 2009

LOGIC
P.கமல்

★ 6 பரீட்சைகள் நடத்தப்படும்
★ வெளி மாணவரும் பரீட்சைக்கு தோற்றலாம்.
★ விண்ணப்பம் இறுதித் திகதி 20.02.2009

உங்கள் பதிவுக்கு

NEC யாழ் நகர். | UNIUVERSAL யாழ்.


### பிரிட்டன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளமையை தான் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனப் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

" பிரிட்டனின் இந்த நடவடிக்கை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு சமமானது. எமது நாட்டின் சுயாதிபத்தியத்தை அவ மரியாதை செய்யும் செயல்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனுடனான உறவில் இது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பிரிட்டனின் நடவடிக்கை மிக மோசமான உதவியற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது என்றும் போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கை அரசு எவ்வாறான பதில் நடவடிக்கையை எடுக்கும் என்பது குறித்து வெளிவிவகார அமைச்சர் எதனையும் தெரிவிக்கவில்லை.

இது விடயம் தொடர்பாக பிரிட்டனுடன் மேலதிக பேச்சு எதனையும் தாம் மேற்கொள்ளப்போவதில்லை என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மோதலில் சிக்கியுள்ள பொதுமக்களின் நிலை குறித்து சர்வதேச ரீதியில் கரிசனைகள் அதிகரித்துள்ள நிலையிலேயே இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி மூண்டுள்ளது.

### முல்லை. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஐந்து நலன்புரி கிராமங்கள் அமைக்கப்பட்டு அவற்றில் 8 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

சார்க் அபிவிருத்தி நிதியம் ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்பித்திருந்தார்.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் வலயத்தில் பலதரப்பட்ட நிதியங்களை இயங்கச் செய்வதால் ஏற்படும் சிக்கல் நிலையைத் தவிர்க்க சார்க் நிதியம் என்ற பெயரில் பொதுவான ஒரு நிதியம் அமைக்கப்படுகிறது - எனத் தெரிவிக்கப் படுகிறது.

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை தொடர்பான வரையறுக்கப்பட்ட நிறுவனம் கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் கீழ் வரையறுக்கப்பட்ட நிறுவனம் ஒன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்பித்திருந்தார். (அ-சி)

### மத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுயேச்சைக்குழுக்களும் இன்னும் பல கட்சிகளும் களத்தில் குதித்துள்ளன.

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் 30 பேரும், நுவரெலி யாவில் 16 பேரும், மாத்தளையில் 10 பேரும் தெரிவாவர். வெற்றிபெறும் கட்சிக்கு 02 போனஸ் உறுப்பினர்கள் வழங்கப்படுவர்.

அதேபோல் வடமேல் மாகாணத் தின் குருநாகல் மாவட்டத்திலிருந்து 34 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 16 பேரும் தெரிவாவர். போனஸ் உறுப்பினர்களுடன் சேர்த்து மொத்த மாக 52 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

மத்திய மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் சரத் ஏக்கநாயக்கவும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எஸ்.பி.திஸா நாயக்கவும், ஜே.வி.பியின் சார்பில் சமன்சிறி பெர்னாண்டோவும் முதல மைச்சர் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் வடமேல் மாகாணத் தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் சார்பில் அதுல விஜயசிங்க வும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார் பில் பிரசன்ன சமலசெனரத்தும், ஜே.வி. பியின் சார்பில் நிமல் ஹேரத்தும் முதலமைச்சர் வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத் தேர்தலில் மேற்படி மூன்று கட்சிகளுக்கிடையேதான் கடும் போட்டி நிலவுகிறது. இப் போட்டி அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலும், அரசுக்கும் ஜே.வி.பிக்குமிடையிலுமே நிலவுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் பெரிதாக மோதிக்கொள்வதாகத் தெரியவில்லை. இந்த இரு கட்சிகளும் அரசுமீதுதான் தேர்தல் வன்முறைக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்றன.

### ஈழத்தமிழருக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீக்குளித்துள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இளைஞரை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

எனினும் இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

லண்டனில் வசித்து வந்த இந்த இளைஞரின் பெயர் முருகதாசன் (வயது 27) என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர், 7 பக்கங்களில் தாயகப் பிரச்சினை தொடர்பாக ஒரு மரண சாசனம் எழுதி வைத்துவிட்டு தீக்குளித்துள்ளார் எனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

முருகதாசன் தீக்குளித்த இடத்தில் மலர்கள் வைத்து மக்கள் வணக்கம் செலுத்தி வருகின்றனர் எனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியசாலைக்கு 147 பேர் சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருமலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழங்கி வருகின்றது.

நோயாளர்களுக்கு கால், கை முறிவுகளுக்கு சிகிச்சையளிக்க மட்டக்களப்பில் இருந்து என்பு முறிவு வைத்திய நிபுணர்கள் நேற்று வந்து சேர்ந்துள்ளனர்.

நோயாளர்களின் இடநெருக்கடிக்கு தீர்வுகாணும் வகையில் கந்தளாய், மூதூர், தம்பலகாமம் ஆஸ்பத்திகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

### புதிய பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா படையினரால் நேற்று நடத்தப்பட்ட தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களில் 27 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 116 பேர் காயமடைந்துள்ளனர்.

இப்பகுதிகள் மீது நேற்று வெள்ளிக்கிழமை மாலை தொடக்கம் 60க்கும் அதிகமான ஆட்லெறி ஷெல் தாக்குதல்கள் அடுத்தடுத்து நடத்தப்பட்டன. அப்போது 7 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன் 45 பேர் காயமடைந்துள்ளனர்.

இரணைப்பாலையில் நேற்று இரவு 8 மணியளவில் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த வேளையிலும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பிரதான வீதியில் இரவு 7.50 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 14 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெயர்ந்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது நேற்றுக் காலை 10 மணியளவில் நடத்தப்பட்ட தொடர் ஷெல் தாக்குதலில் 5 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

க.பார்த்தீபன் (வயது 15), கண்ணன் (வயது 18), தர்மராஜா (வயது 51), சி.சதீஸ் (வயது 34), அ.கிறிஸ்டி குமுதா ஆகியோர் மரணமானார்கள்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்த வேளையில் ஷெல் வீச்சு நடத்தப்பட்டது. அவ்வேளை வீதியில் சென்று கொண்டிருந்த லொறி மீது ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் அதில் சென்று கொண்டிருந்த ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர் சிவகுமார் சசிக்குமார் (வயது 33) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

**வியாழனன்று தேவிபுரம், வள்ளிபுனம் பகுதிகளில்**

தேவிபுரம், வள்ளிபுனம் பகுதிகள் மீது நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான அகோர ஆட்லறி ஷெல் மற்றும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களில் 132 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 358 பேர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்று மாலை செய்தி வெளியிட்டன.

உயிரிழந்தவர்களில் சிறுவர்கள், பெண்கள், முதியவர்களும் அடங்கு கின்றனர் என்றும் இவர்களில் ஏராளமானோர் குடும்பம் குடும்பமாக உயிரிழந்து விட்டனர் என்றும் அந்த இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன. காயமடைந்தவர்கள் மாத்தளன் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர். அங்கு போதிய சிகிச்சை வசதியில்லாமையினால் காயமடைந்த பலர் இறந்தனர் என்றும் கூறப்பட்டது. காயமடைந்த ஏனையவர்களின் நிலைமை மோசமானதாக உள்ளது. அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் இல்லை என்றும் அந்த இணையத்தளங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org